பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 15, திங்கட்கிழமை 31.07.2017 கதிர் 267

## காஸ் விலை மீண்டும் உயரும்?

சமையல் எரிவாயுவின் விலை அடுத்த சில தினங்களில் 200 ரூபாவால் அதிகரிக்கும் அறிகுறி தென்படுவதாக அரசின் தகவல றிந்த வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்கவேண்டு மென லிட்ரோ பக்கம் 18

# உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வே ஆராய்வு

## புதிய அரசமைப்பு ஏற்பாடுகள் குறித்து மட்டக்களப்பில் சம்பந்தன் விளக்கம்



மட்டக்களப்பு, ஜுலை 31

"மாகாணங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெறவோ, தான் பிரயோகிக்கவோ முடியாத ஒரு நிலைமை உறுதிப்படுத்தப்படுமாக இருந்தால், அதன் மூலம் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ள இறைமையின் அடிப்படையில், மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுவதாக அது அமையும். அத்தகைய தீர்வு ஒன்றையே நாம் இப்போது பரிசீலித்து, ஆராய்ந்து, முன்னெடுத்து வருகிறோம்."

தற்போதைய தீர்வு முயற்சிகள் குறித்து நேற்று மட்டக்களப்பில் வைத்து இவ்வாறு விளக்கமளித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரு மான இரா.சம்பந்தன். பக்கம் 03



## இடைக்கால அறிக்கை ஓகஸ்டில்! உறுதியாக நம்புகிறார் சம்பந்தன்

அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை எப்படியாயினும் ஓகஸ்ட் மாதத்தில் (நாளை பிறக்கும் ஆவணி மாதத்தில்) வெளிவரும் எனத் தாம் நம்புகின்றார் என நேற்றைய மட்டக்களப்பு கூட்டத்தில் தெரிவித்தார் இரா.சம்பந்தன் எம்.பி. பக்கம் 18

அளப்பு அருணாசலம்




## நிழல் மாகாண சபை

### சிவில் தரப்புகளைக் கொண்டு அமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜுலை31

வடக்கு மாகாண சபை வினைத்திறன்உடையதாக இயங்குவதற்கு, அது பற்றிய விடயங்களை பொது மக்கள் தரப்பில் இருந்து பெற்று, சபையின் நிர்வா கத்தோடு கலந்து பேசி முன்னெடுப்பதற்காகநிழல் மாகாண சபை ஒன்றை அமைப்பது குறித்த முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசியல் கட்சி சாரா பிரதிநிதிகளைக் கொண்டு இதற்காக ஒரு மக்கள் நலன் அமைப்பை உருவாக்கவும் –

அந்த அமைப்பு மக்களோடு தொடர்பாடல பக்கம் 18

### வலிகாமம் மற்றும் கேப்பாபிலவில்

## காணி விடுவிப்புக் குறித்து விரைவில் நல்ல செய்தி வரும்!

### முதல்வரிடம் இராணுவத் தளபதி உறுதி



(நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜுலை 31

வலிகாமம் வடக்கு மற்றும் கேப்பாபிலவு உள்ளிட்ட பகுதிகளில்படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ள புதிய இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்கா, இது குறித்து வெகு விரைவில் நல்லசெய்திகள்கிடைக்கும் என்றும் வடக்குமுதலமைச்சரிடம் கூறியுள்ளார்.

இராணுவத் தளபதியாகப் பதவியேற்றதன் பின்னர் முதற்தடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளஅவர்நேற்றுக் பக்கம் 18

### தமிழ்மக்கள் பேரவையில் முதல்வர் தெரிவிப்பு

## நாட்டில் அரசியல் ரீதியான முன்னேற்றங்கள் தறிகெட்டு, தடைப்பட்டு, தாமதப்பட்டுள்ளன

### வடக்கு, கிழக்கு மீது எந்த யுத்தத்தையும் திணிக்கக்கூடாது

யாழ்ப்பாணம்,ஜுலை 31

நாட்டில் அரசியல் ரீதியாக முன்னேற்றங்கள் தறிகெட்டு,தடைப்பட்டு,தாமதப்பட்டிருக்கும்இந்த நேரத்தில்எமது சிந்தனைகளும், சிந்தைகளும். சீராக அமைய வேண்டும் என அபிப்பிராயப்படுகின்றோம்.

– இவ்வாறு தெரிவிக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

நேற்றுக் காலை யாழ். பக்கம் 18

## ஊடகவியலாளரின் கமராவை தட்டிவிட்ட இராணுவ அதிகாரி

யாழ்ப்பாணத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவரது ஒளிப்படக் கருவியை இராணுவ அதிகாரி ஒருவர் தட்டி விழுத்தியுள்ளார் எனச் செய்தி வெளியாகியுள்ளது. பக்கம் 18

## கோப்பாய் பொலிஸார் மீது கொக்குவிலில் வாள்வெட்டு

### இரு கான்ஸ்டபிள்கள் படுகாயம்

(நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஜுலை 31

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் பொலிஸார் மீது இனந்தெரியாத குழு ஒன்று நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் திடீரென நடத்திய வாள் வெட்டுத் தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்தனர். அவர்கள் யாழ். பக்கம் 18

## காணாமல் போனோருக்கான அலுவலகம் தீர்வைத் தராது

### நிலையை விளக்குகிறார் சுமந்திரன்



காணாமற்போனோர் அலுவலகத்தால் முழுமையான தீர்வைப்பெற்றுக் கொடுக்க முடியும் என்று சொல்ல முடியாது என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய பக்கம் 18

## 5 நாள் பாதயாத்திரைக்கு பல்கலை மாணவர் முஸ்தீபு

கொழும்பு,ஜுலை 31

மாலபே தனியார் மருத்துவக் பல்கலைக்கழகத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து 5 நாள் பாதயாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றியம்தெரிவித்துள்ளது.

அதன் பதில் இணைப்பாளர் சனத் பண்டார கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகசந்திப்பொன்றின் போது இதனை தெரிவித்தார்.

இந்தப் பாதயாத்திரை பெரதெனிய பல்கலைக்கழகத்தில் இருந்து கொழும்பு வரை விரைவில் முன் பக்கம் 18

## வீட்டில் இருந்த இளைஞனை துரத்தித் துரத்தி வாள்வெட்டு!

### மானிப்பாயில் ரவுடிக் கும்பல் அட்டகாசம்

மானிப்பாய், ஜுலை 31

முகங்களைக் கறுப்புத் துணிகளால்கட்டிக்கொண்டு வாள்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் சென்ற குழுவொன்றுமானிப்பாயில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த இளைஞனை துரத்தித் பக்கம் 18

## புதனன்று தேசிய எதிர்ப்பு தினம் அரசுக்கு எதிராக எழுச்சியுடன்!

நாளைமறுதினம்புதன் கிழமை 02 ஆம் திகதி தேசிய எதிர்ப்புதினம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டு அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த 'சைட்டம்' எதிர்ப்பு மக்கள் செயலணி தீர்மானம் எடுத்துள்ளது.

அரச சொத்துக்களை தனியார் மயப்படுத்தல், பக்கம் 18

# பண்பாட்டுடன் கூடிய வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுங்கள்!

## யாழ்.நகரில் அங்காடி வியாபாரத் தொகுதி திறப்பு விழாவில் முதலமைச்சர் 'விக்கி' வேண்டுகோள்






யாழ்ப்பாணம், ஜூலை 31

புதிதாக அமைக்கப்பட்ட இந்தக் கடைத் தொகுதிகள் உங்கள் கைகளுக்கு இன்று கிடைக்கப் பெறுகின்றன. இவற்றை உங்கள் வீடு போலக் கருதி கவனமாகப் பயன்படுத்தப் பழகுங்கள். சுத்தமாக வைத்திருக்க முன் வாருங்கள். அநாகரிக முறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடாது பண்பாட்டுடன் கூடிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள். அப்போது உங்கள் வர்த்தக நிலையம் கீர்த்தி பெறும். உங்கள் நிதி நிலைமைகளும் உயர்வடையும் என்று அறிவுறுத்தி பேசினார் வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

சுமார் 2 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட 76 கடைத் தொகுதிகளைக் கொண்ட யாழ். மாநகரசபையின் அங்காடி வியாபாரத் தொகுதி திறப்பு விழா நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்துவைத்து உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவைவருமாறு:-

யாழ்.மாநகர சபையின் கீழிருந்த மின்சார சபைப் பகுதி இலங்கை மின்சார சபைக்கு கையளிக்கப்பட்ட பின்னர் இந்தப் பகுதி இன்று ஒரு கடைத் தொகுதியாக அமைக்கப்பட்டு விற்பனை நிலையங்கள் உருவாகுவதற்கு ஏதுவாக மாற்றப்பட்டுள்ளன. இதற்கு இரண்டு வலுவான காரணங்கள் அமைந்திருந்தன என்று எண்ணுகின்றேன். முதலாவது காரணம் யாழ். நகரப் பகுதியில் கடைக் கட்டடங்கள் போதுமானவையாக இருக்கவில்லை. இரண்டாவது காரணம் யாழ்.முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள அங்காடிக் கடைத்தொகுதி மெல்ல மெல்ல அகலிக்கப்பட்டு முனீஸ்வரன் வீதி என்ற ஒரு வீதி அற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த முனீஸ்வரன் வீதி கோட்டைப் பகுதிக்கும் பஸ் நிலையப் பகுதிக்கும் இடையேயான பாதசாரிகள் நடந்து செல்கின்ற ஒரு முக்கிய வீதியாக அமைய இருப்பதால் இவ் வீதியில் உள்ள அனைத்துக் கடைகளும் உடனடியாக அகற்றப்பட வேண்டிய தேவை யாழ். மாநகர சபைக்கு ஏற்பட்டது. இந்த நிலையில் புதிதாக அமைக்கப்பட்ட இந்தக் கடைத் தொகுதிகள் முனீஸ்வரன் வீதியில் கடைகள் நடத்திய 50 பேருக்கும் இன்னும் 21 பேருக்குமாக மொத்தம் 71 கடைகள் இதுவரை புதிய கடைத்தொகுதியில் வழங்கப்பட்டுள்ள நிலையில் இன்னும் 5 கடைகள் வழங்கப்பட இருக்கின்றன என அறிகின்றேன்.

யாழ்.மாநகரசபை இவ்வாறு பெருந்தொகை பணத்தை நகர அபிவிருத்திக்கும் நகரை அழகிய, சுத்தமான ஒரு நகரமாக மிளிரச் செய்வதற்கும் செலவிட்டுக்கொண்டிருப்பதை நீங்கள் அனைவரும் அறிந்திருத்தல் அவசியம். இவ்வாறான அபிவிருத்திகளுக்கு நாமும் எமது பங்களிப்புக்களைச் சரியாக மேற்கொள்ளல் வேண்டும்.

பண்டிகைக் காலங்களிலும் இன்னும் பல விசேட தினங்களிலும் உங்கள் விற்பனை நிலையங்களில் வியாபார நடவடிக்கைகள் அமோகமாக நடைபெறுகின்ற போது உங்கள் கடை வாயில்கள் பொலித்தீன், கடதாசிகள், பெட்டிகள் இன்னும் பிற குப்பை கூழங்களால் நிறைந்து காணப்படுவதை நான் பல முறை அவதானித்திருக்கின்றேன். விற்பனைகள் முடிந்து வீடு திரும்ப முன்னர் அவற்றை அள்ளி உரிய கழிவுத் தொட்டிகளில் போடாது அப்படியே விட்டுவிட்டு சென்று விடுகின்றீர்கள். இதன் மூலம் நகரமே குப்பையாகக் காட்சியளிக்கின்றது.

உங்கள் கடைகளின் முன்பகுதிகளை நீரால் கழுவிச் சுத்தம் செய்ய முயல்கின்ற நீங்கள் உங்கள் கடையின் முன்பு ஒரு சிறிய பள்ளம் காணப்பட்டால் அதனை நிரப்பி அடைப்பதற்கு ஆகக் கூடியது 100 ரூபா செலவும் போகாது. ஆனால் அதை அடைக்க முயல்வதில்லை. மாறாக அந்தக் குழியில் தேங்கி நிற்கும் நீரில் இருந்து பல்லாயிரக்கணக்கான டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகின்றன. பலரின் நோய்த் தொற்றுகளுக்கு நீங்கள் காரணமாகி விடுகின்றீர்கள்.

இதுவரை காலமும் அரசு வேறு நீங்கள் வேறு என்ற மனோபாவத்தில் இருந்தீர்கள். இனியும் அவ்வாறு சிந்திக்கக் கூடாது. எமது கடை, எமது சுற்றாடல், எமது சமூகம் என்று எமது மனோநிலையை விரிவுபடுத்த முன் வரவேண்டும்.- என்றார். (எ)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் நிலைவரத்தை வெளிப்படுத்த வேண்டியது அரசின் கடமை

### ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பரணவிதாரண

காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் அவர்களது உறவினர்களுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டியது நல்லாட்சி அரசின் கடமை என்று காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மெக்ஸ்வல் பரணவிதாரண தெரிவித்துள்ளார்.

காணாமற் போனோர் தொடர்பாக ஆராயும் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டத்தில் ஜனாதிபதி கைச்சாத்திட்டுள்ளமை மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த சட்டத்தை கடுமையாக எதிர்த்துள்ளமை தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது ஆணைக்குழுவின் ஊடாக விசாரணைகளை முன்னெடுத்த போது ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் வந்த போதிலும் அவற்றை முழுமையாக விசாரிப்பதற்கு கால அவகாசம் போதவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தோம்.

தற்போது காணாமற் போனோர் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புக்களும் எழுந்துள்ளன. எனினும், ஏதாவது ஒரு பொறிமுறையை முன்னெடுத்து காணாமற் போனோர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும். காணாமற் போனோர் விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து மக்களுக்குப் பதிலளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். இந்தப் பொறுப்பிலிருந்து அரசு விலகிவிட முடியாது.

மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஒருவர் இறந்து விட்டால் சம்பந்தப்பட்ட குடும்பம் அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்கும். ஆனால், காணாமற் போனோர் ஒருவர் தொடர்பில் இவ்வாறு எதுவும் செய்ய முடியாது. உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்பதுகூடத் தெரியாமல் உறவினர்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். இது தொடர்பில் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

காணாமற் போனோர் விடயத்தில் அரசு என்ன செய்கின்றது என்பதை சர்வதேசமும் பார்த்துக் கொண்டிருக்கின்றது. மக்களின் வேதனையை உணர்ந்துகொள்ள வேண்டும். காணாமற்போன தமது உறவுக்கு என்ன நடந்தது என்பதே தெரியாமல் இருப்பதானது கொடூரமான நிலையாகும். எனவே, ஒரு முறையான விசாரணை பொறிமுறை அவசியமாகும். அதனூடாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முன்வர வேண்டும். மாறாக இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து இழுத்தடித்துக் கொண்டு இருப்பது முறையானதல்ல.- என்றார்.

## கட்டுநாயக்காவில் தரையிறங்கினார் உலகை வலம் வரும் சாதனைப் பெண்!




தனி இயந்திரம் கொண்ட விமானத்தின் மூலம் ஆப்கன் தேசிய விமான சேவையின் பெண் விமானி Shaesta Waiz உலகத்தைச் சுற்றி வருகிறார். இவ்வாறு உலகம் முழுவதும் பயணித்துக் கொண்டிருக்கும் அவர் திடீரென இலங்கையில் தரையிறங்கியுள்ளார்.

இலங்கையை முதல் தரிப்பிடமாகத் தெரிவு செய்யப்படாத போதிலும், தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அவர் தனது விமானத்தை இலங்கையில் தரையிறக்கியுள்ளார்.

Beechcraft Bonanza A36 என்ற விமானத்தில் உலகம் முழுவதும் பயணிக்கும் அவர் 18 நாடுகளில் 30 இடங்களில் விமானத்தை தரையிறக்கியுள்ளார்.

அவரது பிறப்பிடம் ஆப்கன் என்ற போதிலும் விமானிக்கான கற்கைநெறிகளை அமெரிக்காவில் மேற்கொண்டுள்ளார்.

விமானசேவைத்துறையில் ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையால் அடுத்த பரம்பரையில் பெண்கள் விமானத்துறையில் நெருக்கமாக செயற்பட வேண்டும் என்பதே அவரது பயணத்தின் பிரதான நோக்கமாகும்.

உலகம் முழுவதும் ஒரு லட்சத்து 30 ஆயிரம் விமானிகள் உள்ள போதிலும் 4 ஆயிரம் பெண் விமானிகள் மாத்திரமே செயற்படுகின்றனர்.

இந்நிலையில் ஆப்கன் விமானியை வரவேற்கும் நிகழ்வு ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)



நல்லூர் ஆலய சூழலில் இன்று...

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் திருமுறை அரங்கு: பாட்டு எம்.துஷ்யந்தன், வயலின்: சு.கோபிதாஸ், மிருதங்கம்: கு.ரவிசங்கர், கெஞ்சிரா: நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங்: சி.செந்தூரன்.

★★★

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவப் புலவர் சைவநெறிச் சன்மார்க்கர் பொ.சந்திரவேல் 'ஐந்தொழில் தத்துவம்' எனும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (ச)

## உள்ளக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமகால அரசியல் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும் கட்சியின் கூட்டம் கட்சியின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு கருத்து வெளியிடுகையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பதிய யோசனைத் திட்டத்தின்படி நாட்டின் ஆட்சி அதிகாரம் மூன்று மட்டங்களில் இருக்கும்.

தேசிய மட்டம், மாகாண அல்லது பிராந்திய மட்டம், உள்ளூராட்சி மட்டம் ஆகியவையே அவை. பல்வேறு நாடுகளிலும் அதிகாரப் பகிர்வு அவ்வாறுதான் உள்ளது.

தேசிய மட்டத்தில் நாட்டின் ஒருமைப்பாட்டை பேணுவது தொடர்பான அனைத்து விடயங்களும் கையாளப்படும். அதற்குத் தனியாக ஒரு பட்டியல் இருக்கும்.

தேசியப்பாதுகாப்பு, இராணுவம், கடற்படை, விமானப் படை, தேசிய பொலிஸ் படை, பாதுகாப்பு, வெளிவிவகாரம், பிரஜாவுரிமை, குடிவரவு மற்றும் குடியகல்வு, நீதி, நிதி சம்பந்தமான விடயங்கள், சர்வதேச உறவுகள், ஒப்பந்தங்கள் போன்றவை தேசிய மட்டத்தில் கையாளப்படும்.

அதேசமயம், மாகாண ரீதியான விடயங்கள் நேரடியாக மாகாண மட்டத்தில் கையாளப்படும். காணி, சட்டம், ஒழுங்கு, பிராந்தியப் பொலிஸ், கல்வி, உயர்கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில், பலவிதமான தொழில் நடவடிக்கைகள், கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, போக்குவரத்து, மீள்குடியேற்றம், தொழில்வாய்ப்புகள், புனர்வாழ்வு, கலாசார விடயங்கள் மற்றும் பொருளாதார, சமூக, பண்பாட்டு விடயங்கள், மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய விடயங்கள் போன்றவை மாகாண சபைகளுக்கு உட்பட்டு இருக்கும்.

அதற்கு அப்பால் உள்ளூராட்சி மன்றங்களின் பணிகள் புறம்பான பட்டியலில் அடங்கியிருக்கும்.

இந்த மூன்று மட்டங்களிலும் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள அதிகாரங்களை சம்பந்தப்பட்ட ஆட்சி அதிகாரத்துக்குரியவர்களே பிரயோகிக்க வேண்டும்; பிரயோகிக்க முடியும்.

தேசிய மட்டத்தைப் பொறுத்த வரை ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர், அவருடைய அமைச்சர்கள், அமைச்சரவை, அமைச்சுக்கள் ஆகிய தரப்புகள் அந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கும்.

மாகாண அல்லது பிராந்திய மட்டத்தில் மாகாண சபைகள், அவற்றின் முதலமைச்சர்கள், அமைச்சர் வாரியம், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் அதிகாரங்களைக் கையாளுவர்.

அது போன்றே உள்ளூராட்சி மட்டத்திலும் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள், அந்த அதிகாரங்களைக் கையாளுவர்.

மூன்று மட்டங்களிலும் அதிகாரங்கள் தெளிவாக வரையறை செய்யப்பட்டு, அந்தந்த மட்டங்களில் அதிகாரமுடையோர் அதனைப் பயன்படுத்துவர்.

சுருக்கமாகக் கூறுவதானால் அந்தந்த அதிகார எல்லைக்கு உட்பட்ட விடயங்களை மக்கள், தங்களின் இறைமையின் அடிப்படையில் பயன்படுத்துவர்.

தேசிய மட்டத்தைப் பொறுத்தவரை ஜனாதிபதி, பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் தேசிய மட்டத்தில் மக்களே தெரிவு செய்வர். அதனால் தேசிய விடயங்களை அவர்களே கையாளுவர்.

மாகாணங்களைப் பொறுத்த வரை மாகாண மக்கள் தங்களின் இறைமையின் அடிப்படையில் தாங்களே தெரிவு செய்த மாகாண முதலமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாகாண அமைச்சர்கள் ஆகியோர் மூலம் கையாளுவர்.

அதேவிதமாக உள்ளூராட்சி மன்றங்களின் விடயங்களும் அந்த உள்ளூராட்சிக்குரிய மக்களினால் தெரிவு செய்யப்பட்ட மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், உபதலைவர்கள் ஊடாகக் கையாளப்படும்.

இந்த அதிகாரங்களை மீளப் பெறமுடியாது.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறப் பெறுவதாக இருந்தால் - அத்தகைய தேவை ஏற்பட்டால் - அதற்கு விசேட ஏற்பாடுகள் இருக்கும்.

மாகாணங்களின் - அதிகாரங்களை மத்திய அரசு பயன்படுத்த முடியாது. அவ்விதமாகப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டால் அதற்கு சில ஒழுங்கு முறைகள் பின்பற்றப்பட வேண்டியிருக்கும்.

அந்த வகையான ஒரு நிலைமை உருவாகுமேயாக இருந்தால் அது மகக்ளின் உள்ளக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு விடயமாக முழுமை பெறும். அதுதான் அதனுடைய அர்த்தம்.

அதிகாரங்கள் பகிர்ந்தளித்த பின்னர் மத்திய அரசு அதனை மீளப் பெறமுடியாத நிலை ஏற்படுத்தப்படுமானால் -

அந்த அதிகாரங்களை மத்திய அரசு அதற்குப் பிறகு, தான் பிரயோகிக்க முடியாத ஒரு நிலைமை உருவாகுமானால் -

பகிர்ந்தளிக்கப்பட்ட இறைமையின் அடிப்படையில் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை அதன் மூலமாக அங்கீகரிக்கப்பட்டதாகும். அதுதான் நிலைப்பாடு.

இதுவே உலகத்தில் உள்ள பல நாடுகளில் உள்ள நிலைமை. அதைப் புரிந்து கொள்வோம்.

தற்போது ஒரு சிந்தனை உள்ளது. ஓர் இரண்டாவது சபை - செனட் சபை - அமைக்கப்படுகிறது.

அதில் மொத்தம் 55 உறுப்பினர்கள். 9 மாகாண சபைகளும் தலா ஐந்து வீதம் 45 உறுப்பினர்கள் நியமிக்க நாடாளுமன்றம் பத்து பேரை நியமிக்கும்.

மாகாணங்களுக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரம் திரும்பப் பெறப்பட வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அங்கீகாரம் பெற வேண்டும். அதே சமயம் செனட்டிலும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

ஒரு மாகாணத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீளப்பெறுவதாயின் அந்த மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து செனட் உறுப்பினர்களில் குறைந்த பட்சம் மூவரினது ஆதரவும் அவசியமானதாக இருக்கும்.

இந்த விடயம் இப்போது பரிசீலனை நிலையிலேயே உள்ளது. இறுதித் தீர்மானம் ஏதும் எட்டப்படவில்லை.

புதிய தீர்வு யோசனைப்படி, அந்த அரசமைப்பில் ஒற்றையாட்சி என்ற சொல் இருக்காது; சமஷ்டி என்ற சொல்லும் இடம் பெறாது.

சிங்களத்தில் 'எக்க இராஜ்ய' என்ற சொல் இருக்கும். ஆனால் அதற்குத் தெளிவான விளக்கமும் இருக்கும். அதாவது 'எக்க ராஜ்ய' - என்பது பிரிபடாத, பிரிக்கப்பட முடியாத ஒரு நாடு என்ற விவரிப்பு அதில் இடம்பெற்றிருக்கும்.

இத்தகைய யோசனைத் திட்டம் இடைக்கால அறிக்கையாக அரசமைப்புச் சபையிடம் கையளிக்கப்படும்.

அது தயாரிக்கப்பட்டு, இறுதி செய்யப்பட்டு, அரசமைப்புச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டதும் நாம் மக்களிடம் விடுவோம். எமது மக்கள் முன் அதைச் சமர்ப்பிப்போம். மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த உரிய சந்தர்ப்பம் தருவோம் - என்றார் சம்பந்தன்.

## நாட்டில்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன். கட்சிகள் அதிகார ரீதியாக மையப்படுத்தப்பட்டவை. கட்சித் தலைவர்கள் தமது கட்டுப்பாடுகளை விதித்து கட்சியைக் கட்டிக் காக்கவேண்டிய ஒரு கடப்பாடு அவர்களுக்கு உண்டு. அதனால் தான் ஒழுங்கமைப்புக்கு அவர்கள் பங்கு மிக்க உபயோகம் அளிக்கின்றது.

ஆனால் இயக்கரீதியாக நாங்கள் இயங்கஆரம்பித்ததும் அதில் ஒரு ஜனநாயக சமூகப் பொது உணர்ச்சி மேலோங்குவதைக் காணலாம். அந்தமனோபாவத்தை எம்மக்களிடையே வளர்க்க வேண்டும், வளரவிட வேண்டும் என்று நாம் எண்ணுவதில் பிழையில்லை என நம்புகின்றேன்.

அதாவது எம் மக்கள் தமது வருங்காலத்தைப் பற்றிக் கூட்டாகச்சிந்தித்து, சிறந்தஅரசியல் முடிவுகளுக்கு வரவேண்டும் என்றால்அவர்கள் இடையேஅரசியல் ரீதியான புரிந்துணர்வை நாம் முதலில் ஏற்படுத்தவேண்டும். தற்போது எமது மக்களுக்கிருக்கும் ஒரே அரசியல் ரீதியான புரிந்துணர்வு கட்சி சார்பானதே அல்லது தனித் தலைவர்கள் சார்பானதே. எமது இயக்க ரீதியான பயணமானது எமது தமிழ் மக்களைஅரசியல்புரிந்துணர்வின் மூலம்ஐக்கியப்படுத்தவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்குஅரசியல் அறிவு பரந்துபட்டுப் பரவ வேண்டும்.

அடுத்த கட்ட நடவடிக்கையாக இதற்கிசைவாக எங்கள் இயக்கம் இயங்கினால் என்ன என்ற எண்ணமே இன்று எம்மை இங்கு கூடி வரவைத்துள்ளது.

மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை அசைக்க முடியாத அரசியல் அஸ்திவாரத்தில் அடிநாட்டவேண்டும் என்றுநாம் அபிப்பிராயப்படுகின்றோம். அதற்கானஉங்கள் அமோகமான அரவணைப்பையும் நாம் நாடுகின்றோம்.

அதாவது சந்து, பொந்துகளுள் வாழும் எம் மக்கள் மத்தியில்அரசியல் அறிவை எடுத்துச் சென்று அவர்களைஅரசியல் ரீதியாக ஆற்றுப்படுத்த ஆவன செய்யவேண்டும் என்று அபிப்பிராயப்படுகின்றோம்.

வடமாகாணம் பல மாவட்டங்களை உடையது. மாவட்டரீதியாகத் தமிழ் மக்கள் பேரவை மக்களிடையே அரசியல் அறிவைப் பரப்ப ஆவன செய்யலாம்என்று அபிப்பிராயப்படுகின் றோம். முதலில் எமக்குள் சில அரசியல் அடிப்படைகள் அறிவுறுத்தப்பட்டுஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். நாம் அரசியல் யாப்பு பற்றி அரசாங்கத்திற்கு எமது முன்மொழிவுகளை முன்வைத்த போதே அவ்வாறான அடிப்படைகளை அறிவித்துவிட்டோம். அவற்றை ஆழச்சிந்தித்து ஆவணமாக அச்சேற்றி எம்மக்கள் மத்தியில் அலசி ஆராய விட வேண்டும். கூட்டங்கள் போட்டு அரசியல் ரீதியாக நாம் எதிர்பார்ப்பனவற்றை அடையாளங்காண முன் வரவேண்டும்.

எமது அரசியல் அபிலாஷைகளை அடையாமல் போனோமானால் காலக்கிரமத்தில் நாம் அனுபவிக்கப் போகும் எமது அவலங்கள் பற்றி மக்களுக்கு அறிவிக்க நாம் அனைவரும் முன்வரவேண்டும்.

1. எதற்காக வடகிழக்கை இணைக்கக் கோருகின்றோம்?

2. இணைக்காவிட்டால் நடப்பது என்ன?

3. எதற்காக சமஷ்டி அடிப்படையிலான ஓர் அரசியல் யாப்பை வலியுறுத்துகின்றோம்?

4. அவ்வாறான சமஷ்டி கிடைக்காவிட்டால் ஆவதுஎன்ன?

5. எதற்காக உள்நாட்டு சுயாட்சியை வலியுறுத்துகின்றோம்?

6. அது கிடைக்காவிட்டால் நாம் அனுபவிக்கப் போவது என்ன?

7. எமது பாரம்பரிய பிரதேசங்கள் என்றால் என்ன?

8. அவற்றை ஏன் வலியுறுத்துகின்றோம்?

9. அவற்றை அடையாளப்படுத்தி அடைய முனையாவிட்டால் ஆவதுஎன்ன?

10. எமதுஅரசியல் எதிர்பார்ப்புக்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்குமா?

11. அப்படியானால் அவற்றைக் கைவிட்டு அரசாங்கம் தருவதைப் பெற்று திருப்தி அடையலாமா?

12. பெரும்பான்மை இனத்தோரும் சிலசிறுபான்மை மதத்தோரும் எமது எதிர்பார்ப்புக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் அவை பற்றி நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

13. எமது எதிர்பார்ப்புக்களை எம் மக்கள் மனதில் படிகப்பட வைக்கநாம் ஒரு சஞ்சிகையைவெளியிடவேண்டுமா? அது மும்மொழிகளிலும் வெளிவர வேண்டுமா?

14. எமது இயக்கம் பற்றியும் அதன் நோக்குகள் பற்றியும் பூரண அறிவை அம்பலப்படுத்த அச்சஞ்சிகை அதிவிரைவில் அமைபடவேண்டுமா?

இவற்றை விட ஒரு கருத்து வைத்திய கலாநிதி லக்ஷ்மன் அவர்களால் முன்வைக்கப் பட்டது. அதாவது அரசியல் யாப்பில் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குவது பற்றியது. எம்மைப் பொறுத்த வரையில் எந்த மதத்திற்கும் முன்னுரிமை வழங்க வேண்டிய அவசியமேதுமில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏழு மாகாணங்களில் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குவதென்பது அவர்களின் விருப்பம். ஆனால் தயாரிக்கப்படும் எந்த அரசியல் யாப்பிலும் வடக்குக் கிழக்கில் சகல மதங்களும் சம உரிமைபெற வேண்டும் என்பதே எமது கோரிக்கை. பௌத்தத்தை வட கிழக்கில் திணிக்க எந்த அரசாங்கத்திற்கும் தார்மீக உரித்துக் கிடையாது.

இன்னோரன்ன கேள்விகள் பலவற்றுக்கு எம்மால் விடை காணப்படவேண்டும். ஆர அமரச் சிந்தித்தே அடுத்தகட்ட நடவடிக்கையில் இறங்கவேண்டும். ஆனால் உடனேயே எம்மக்களிடையே அரசியல் அறிவைப் பரப்ப மாவட்டந் தோறும் எமது தொடர்பாடல் பிரதிநிதிகள் நியமிக்கப்படவேண்டும். அவர்களை வழி நடத்த எமது இயக்கம் ஒரு விசேட அரசியல் குழுவை நியமிக்கவேண்டும். இக்குழுவே தொடர்பாடல் பிரதிநிதிகளுக்கு தமிழ் மக்கள் பேரவையின் கருத்துக்களை வலியுறுத்தி வைக்கும்.

தொடர்பாடல் பிரதிநிதி நாம் அமைக்கப் போகும் ஒரு மாவட்டக் குழுவுடன் இணைந்து அரசியல் அறிவுபரவலை அந்தந்த மாவட்டத்தில் இயற்றிவைப்பார். ஒருசஞ்சிகைக் குழு இவர்களுக்கு இணை அனுசரணையாகச் செயற்படும்.

இவை பற்றி உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். எம்மைத் தடம் பெயர வைக்கதகாத நடவடிக்கைகள் பல இன்று எடுக்கப்பட்டு வருகின்றன. நடவாத நிகழ்வுகளை நடந்ததாகக் கூறி நஞ்சை எம் மக்கள் மனதில் நடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. ஆகவே எம்மிடையே ஒற்றுமை இருத்தல் அவசியம். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை இன்றேல் எல்லோர்க்குந் தாழ்வு'. இதை நாம் மறத்தல் ஆகாது. கொள்கைகளில் நாங்கள் இறுக்கமாக இருப்போம். எமது நடவடிக்கைகளில் எமது நம்பகத்தன்மையை வலியுறுத்துவோம். ஆனால் எமது மனங்களில் இருக்கும் வன்மத்தைக் களைவோம் - என்று கூறி தொடர்ந்து எமது கலந்துரையாடல்களை இன்று முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்று கூறி வைக்கின்றேன். அடி மட்ட அரசியல்அறிவுறுத்தல்கள்பற்றி உங்கள் கருத்துக்களைஅறிய ஆவலாய்உள்ளோம். -என்றார்.

## காணி....

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதி விடுவிப்புத் தொடர்பில் பேசி உரிய நடவடிக்கையை எடுப்பார் எனத் தெரிவித்த இராணுவத் தளபதி மயிலிட்டியை விடுவித்தது போன்று இன்னும்பல இடங்களை விடுவிப்பது குறித்தான செயற்பாடுகள் நடைபெறுகின்றன எனவும் தெரிவித்திருந்தார்.

கேப்பாபிலவுக் காணிகள் தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்படுதாகவும், மீள்குடியேற்ற, புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சுவாமிநாதன் அக் காணிகளிலிருந்து படையினர் வெளியெறுவதற்கு உரிய நிதியைத் தருவார் என்று கூறியிருக்கின்றமையால் வெகு விரைவில் காணிகளை விட்டு படையினர் விலகிச் செல்வார்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதற்காக சில விவரங்களைக் கேட்டுள்ளார் எனவும் விரைவில் அது குறித்த நடவடிக்கை எடுக்க இருக்கிறார் எனவும் தெரிவித்த இராணுவத் தளபதி, விரைவில் நல்ல செய்தி கிடைக்கும் என்ற வகையில் பேசியுள்ளார். - எனவும் சந்திப்புக் குறித்து முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.




நின்னைச் சரணடைந்தோம் - முருகா
நிம்மதி தந்தருள்வாய்; பக்தி
அன்பெனும் ஊற்றதனை - உந்தன்
அடியவர் மேல் பொழிந்தருள்வாய்!

- அலெக்ஸ் பரந்தாமன், புதுக்குடியிருப்பு.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பேரவையில் முதல்வரின் செய்தி

அண்மைக்கால தமிழர் அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரிய தாகக் கருதப்படும் 'தமிழ் மக்கள் பேரவை'யின் கூட்டம் ஒன்று நேற்று நடந்திருக்கின்றது.

கடந்த ஏப்ரலில் திருகோணமலையில் கூடிய பின்னர் இப்போது மூன்று மாதங்கள் கழித்து யாழ்ப்பாணத்தில் அது கூடியுள்ளது.

அந்தக் கூட்டத்தில் இணைத் தலைவருக்குரிய உரையை ஆற் றிய வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன், அந்த உரையை வழமை போல ஊடகங்களுக்கும் வெளியிட்டிருக்கின்றார்.

அந்த உரை பல்வேறு விதமான செய்திகளைக் கூறுகின்றது. அவை கவனிக்கத்தக்கவை.

அவரது உரையின் முத்தாய்ப்பு, *"எம்மிடையே ஒற்றுமை இருத்தல் அவசியம். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. ஒற்றுமை இன்றேல் எல்லோர்க்கும் தாழ்வு'. இதை நாம் மறத்தல் ஆகாது. கொள்கையில் நாம் இறுக்கமாக இருப்போம். எமது நடவடிக்கை யில் எமது நம்பகத்தன்மையை வலியுறுத்துவோம்."* - என்று அமைகின்றது.

மிக அற்புதமான விடயத்தை - உரிய இடத்தில் - உரிய சந்தர்ப் பத்தில் - தெரிவித்திருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

மாற்றுத் தலைமை என்ற கோட்பாட்டில் தமிழரின் தற்போதைய ஐக்கியத்தைச் சிதறடிக்க எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு தமது நடத்தை மூலம் தற்காலிகமாகவேனும் தடை வைத்திருக்கும் முதல்வர், இந்தக் கூட்டத்திலும் ஐக்கியம் பற்றி வலியுறுத்தியமை மூலம் இந்த விடயத்தில் தனது தெளிவான - உறுதியான - திட மான - நிலைப்பாட்டை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்தியிருக் கின்றார் என்றே தோன்றுகின்றது. அது பாராட்டத்தக்கது.

ஆனாலும், அரசியல் ரீதியாக அவர் இந்தக் கூட்டத்தில் முன் வைத்திருக்கும் கருத்துகள் - எம்மை நாமே கேட்க வேண்டியவை என்ற சாரப்பட அவர் வைத்திருக்கும் கேள்விகள் - தமிழ் மக்க ளின் அரசியல் சிந்தனைப் போக்கைத் தட்டி எழுப்பி விழிப் புணர்வை ஏற்படுத்தத் தூண்டுபவையாக இருக்கின்றன என் பதும் நோக்கற்பாலது.

மக்களுக்கு அரசியல் ரீதியான புரிந்துணர்வை - விழிப்புணர்வை - ஏற்படுத்தி அதன் மூலம் தமிழ் மக்களை ஐக்கியப்படுத்தலாம் என்ற அவரது தந்திரோபாயம் மிகச் சரியானது; எவரும் தட்டிக் கழிக்க முடியாதது.

அந்தத் தந்திரோபாயத்தின் வழியில் மக்களுக்கு அரசியல் ரீதி யாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு எம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் பலவற்றை இந்த உரையிலேயே அவர் அடுக்கியிருக்கின்றார்.

இணைப்பு, தாயகம், சுயாட்சி, சமஷ்டி, மக்களின் அபிலாஷை, எதிர்பார்ப்பு, தீர்வு ஆகியவை குறித்தெல்லாம் அவர் எழுப்பும் கேள்விகளை எமது மக்களும் தமக்குத் தாமே கேட்டு, அவற்றுக்கு விடை தேடிக் கொள்வார்களேயானால், எமது இனத்துக்கு - எமது மக்களுக்கு - எமது சமூகத்துக்கு - அரசியல் விழிப்புணர்வு முழுமையாக வந்துவிடும். அதில் சந்தேகமே இல்லை.

அத்தகைய விழிப்புணர்வு மக்களுக்கு வருமாக இருந்தால், தலைவர்கள் சரியான வழியிலேயே செயற்பட்டாக வேண்டும். அரசியல் விழிப்புணர்வு மிக்க மக்கள் மத்தியில் ஜனநாயகத் தலைமைகள் தான்தோன்றித்தனமாகச் செயற்பட முடியாது என்ற யதார்த்த உண்மையைப் புரிந்து, அது வழியே காய் நகர்த்த சாணக்கியமாக முயல்கின்றார் முதல்வர். அது வரவேற்கத்தக்க சிறந்த போக்கே.

ஆனால், அவரை அந்த உரையின் ஊடே இன்னொரு செய்தி யும் சொல்லப்படுவது கவனிக்கத்தக்கது. அது மக்களுக்குரிய செய்தி அல்ல. தமிழ் மக்கள் பேரவையினருக்கான செய்தி.

மூன்று மாதங்களுக்குப் பின்னர் கூடியிருக்கின்றீர்கள். தமிழ் மக்கள் பேரவையைக் கட்டமைப்பு ரீதியாக ஒரு மக்கள் இயக்க மாக முன்னெடுப்பதற்கு என்ன செய்து கிழித்துள்ளீர்கள் என்று தனது பேரவையின் செயற்பாட்டாளர்களைப் பார்த்து மென் வசனத்தால் வன்மையான அர்த்தம் பொதிந்த - கேள்விகளை அவர் எழுப்பியிருக்கின்றார் என்றுதான் கொள்ளலாம்.

தமிழ் மக்கள் பேரவை ஏப்ரலில் திருகோணமலையில் கூடிய போது மாவட்ட ரீதியான செயற்குழு, மாகாண ரீதியான செயற்குழு, தேசிய ரீதியாக செயற்குழு ஆகியவை பற்றியெல்லாம் முதல்வர் விக்னேஸ்வரன் தமது எதிர்பார்ப்புக்களை வெளியிட்டிருந்தார்.

ஆனால், அவை எவையும் உருப்படியாக முன்நகர்ந்தனவாக இல்லை. மீண்டும் மூன்று மாதங்களின் பின்னர் கூடியிருக்கின் றீர்கள். இனி என்ன செய்யப்போகின்றீர்கள்? இது போலவே செயலாற்றும் காலத்தைக் கடத்தப் போகின்றீர்களா? அல்லது பேரவையை மக்கள் இயக்கமாக மாற்றப் போகின்றீர்களா? - இந்த விடயங்களையே தமது சில ஆலோசனைகள் மூலம் சொல் லாமல் சொல்லியிருக்கின்றார் முதல்வர் விக்னேஸ்வரன். தங்கள் நேரம், வலிமை, ஈடுபாடு, பங்களிப்பு என்பவற்றை தமது உரை யில் கூறியபடி, மனதில் வன்மமற்றவர்களாக மக்களுக்காகவும், பேரவைக்காகவும் செலவிடக் கூடியவர்கள் இருந்தால் மட்டுமே, முதல்வர் விக்னேஸ்வரன் எதிர்பார்க்கின்றமை போன்று ஒரு மக்கள் இயக்கமாக பேரவை முகிழும்.

இல்லையேல், அதுவும் மாற்றுத் தலைமை விவகாரம் மாதிரி மாற்று அரசியல் கட்டமைப்பு என்பதுடன் அடங்கிவிடும். அவ்வளவு தான்!

# அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தை விமர்சிப்போர் நாட்டின் கடன் சுமைகளைக் கண்டுகொள்ளவில்லை!

### அமைச்சர் வஜிர தெரிவிப்பு



குருநாகல், ஜூலை 31

அம்பாந்தோட்டை துறை முகம் தொடர்பில் சீனாவுடன் கைச்சாத்திடப்பட்ட உடன் படிக்கை தொடர்பில் விமர்சிப் பவர்கள் இந்த நாட்டின் கடன் சுமைகளைக் கண்டு கொள்ளா திருக்கின்றமை கவலை அளிக் கிறது.

-இவ்வாறு உள்நாட்டலு வல்கள் அமைச்சர் வஜிர அபே வர்தன தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று ஞாயிற் றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள் ளார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

இனிவரப்போகின்ற பல தசாப்த காலங்களை எண்ணியே அமைச்சரவையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அமைச் சரவையில் இருப்பவர்கள் பச் சிளம் குழந்தைகள் அல்லர். கட்சிகளுக்குத் தேவையான வகையில் அரசு கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப் பதில்லை. நாட்டு மக்கள் மற் றும் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்தே அரசு தீர்மானங்களை எடுக்கிறது. அமைச்சரவையில் கலந்துரை யாடியே கொள்கை ரீதியான முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அவை அமுல்படுத்தப்படு கின்றன.

மக்களுடைய வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்தான் அமைச்சர்கள். நாட்டின் கொள் கைகள் தொடர்பான தீர்மானங் களை எடுக்கவே மக்கள் அவர் களைத் தெரிவு செய்துள்ளனர். கொக்கல சுதந்திர வர்த்தக வலயத்தை நிர்மாணித்த போது ஹபராதுவ மக்கள் எதிர்த்தனர். தற்போது அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு முதலீட்டை கொண்டுவர உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போதும் மேலும் சிலர் எதிர்க்கின்றனர். அவர்கள் குறுகிய அரசியல் இலாபம் பற்றி மட்டுமே சிந்திக்கின்றனர். நாங்கள் அரசு என்ற வகையில் நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்திக்கின்றோம்.

அம்பாந்தோட்டை ஒப்பந்தம் மூலம் ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உரு வாக்க நாங்கள் திட்டங்களை வகுத்துள்ளோம். அவை நடை முறைப்படுத்தப்படும். சிறிய தரப்பினரின் எதிர்ப்பைக் கவ னத்தில் கொள்ளாது பெரும்பான் மையான மக்களின் நலன்களுக் காக நாங்கள் வேலைகளை செய்கின்றோம்.

அரச கொள்கைகளை உரு வாக்க தொழிற்சங்கங்களுக்கு முடியாது. அது பொதுமக்க ளுக்கு மட்டுமே முடியும். வெறு மனே போராட்டங்கள் மூலம் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் சிந்திப்பவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு தமது நேரத்தை வீணடிக்க மாட்டார்கள் .-என்றார். (ச)

# மஹிந்த மீண்டும் அரச தலைவர் பதவிக்கு வந்தவுடன் அம்பாந்தோட்டை துறைமுகம் மக்கள் மயமாக்கப்படுமாம்!

### முன்னாள் அமைச்சர் பஸில் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் நாட்டின் அரச தலைவர் பத விக்கு வருவார். அவ்வாறு அவர் பதவி ஏற்றதுடன் அம்பாந் தோட்டை துறைமுகம் மக்கள் மயப்படுத்தப்படும்.

-இவ்வாறு முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கம்பஹா - உடுகம்பொல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கூட் டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆட்சிக்கு வந்த பின்னர் இந்திய - இலங்கை உடன் படிக்கையில் ஒன்றாக இணைக் கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கை மஹிந்த ராஜபக்ஷ இரண்டாகப் பிரித்தார். அதைப் போல சீனா - இலங்கை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும். அம்பாந் தோட்டை துறைமுக உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்ட ஜூலை 29 ஆம் திகதி தேசிய துக்க தினம் ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி நடவடிக்கை!

நாட்டின் பல மாவட்டங்களில் வறட்சியான காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த உலர் உணவுப் பொருள்களை விரை வாக உரியவர்களுக்குப் பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்று ஞாயிற்றுக் கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது.

அத்துடன், அப்பிரதேச மக்களுக்கான குடி தண்ணீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்கும் நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஜனாதிபதி உரிய அதிகாரிகளிடம் பணிப்புரை விடுத்துள் ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# தரம் – 1 இற்கான மாணவர் அனுமதி சுற்றுநிருபத்தில் மாற்றம்!

அடுத்த வருடம் தரம்-1 இற்கான மாணவர் களைச் சேர்த்துக் கொள்வதற்காக கல்வி அமைச் சில் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் மாற்றத்தைக் கொண்டுவர கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி பெற்றோர், பாதுகாவலர் ஆகியோ ரின் கீழ் உள்ள ஒரு பிள்ளையை பாடசாலையில் அனுமதிக்கக் கோரும் போது, அவர்கள் குடியி ருக்கும் இடத்தின் காணி உறுதியை முன்வைக்க வேண்டும் என அச்சுற்றுநிருபத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய மாணவர்களை அனுமதிக்கும் போது ஏற்படும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு தேசிய பாடசாலை அதிபர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்தே, இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக் கப்படுகின்றது. (ச)

## இயற்கைப் பானங்களை மீள் அறிமுகப்படுத்தல்

பிள்ளைகள் இனிப்பூட்டிய பானங்களுக்கு அடிமையாவதை நிறுத்தி, குடிதண்ணீர் இயற்கையான பானங்கள் அருந்துவதை ஊக்கப்படுத்துவோம். இதற்காக எமது பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் ஏற்படுத்துவோம்.



பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைப்பதை உறுதிப்படுத்துவோம்.

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்.மாநகரசபை.

## நாளை

01.08.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : விசாகம் பி.ப 3.18 வரை
திதி : நவமி பி.ப 2.21 வரை
சுபநேரம் : 10.33 – 12.03 வரை
இராகுகாலம் : 3.03 – 4.33 வரை

## போதைப்பொருள்களுடன் வெளிநாட்டவர்கள் 24 பேர் 5 மாதங்களில் கைது!

இவ்வாண்டின் முதல் 5 மாத காலப்பகுதியில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருள்களுடன் வெளிநாட்டவர்கள் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவர்களிடமிருந்து, சுமார் 34 கிலோகிராம் ஹெரோயின், 52 கிலோகிராம் கேரளக் கஞ்சா மற்றும் கொக்கேயின் முதலான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானியர்கள் 9 பேர், இந்தியர்கள் 8 பேர், நைஜீரியர்கள் இருவர் உட்பட பிரான்ஸ், இத்தாலி, மாலைதீவுகள், ஈரான் மற்றும் லட்வியா முதலான நாடுகளைச் சேர்ந்த தலா ஒவ்வொருவருமே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேவேளை கடந்த 2016ஆம் ஆண்டு, வெளிநாட்டவர்கள் 83 பேர், போதைப் பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (எ)

### கசிப்பு உற்பத்தி, விற்பனை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற

# சட்டவிரோதசெயல்களைத் தடுக்க விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசியம்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூலை 31

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மேலும் அதிக விழிப்புணர்வுகள் ஏற்படுத்த வேண்டியுள்ளன என்று மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாவட்டத்தில் சட்ட விரோத மதுபான உற்பத்தி, விற்பனைகளைத் தடுப்பது தொடர்பிலும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பிலும் அதிக விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறு சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனைகள் மாவட்டத்தில் மிகமோசமாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை அறிந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தாலும் கூட சமூக ரீதியான விழிப்புணர்வுகள் ஏற்படுவதற்கு சில தடைகள் காணப்படுகின்றன.

இதற்கு கிராம ரீதியில் மக்கள் ஒன்றுதிரண்டு விழிப்புணர்வுகளை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் தாங்களாக உணர்ந்து திருந்திக் கொள்ள வேண்டும்.

உண்மையில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் போன்ற செயற்பாடுகளுக்கெல்லாம் இவ்வாறான சட்டவிரோத மது பாவனை தான் என்பது எங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

கிராம ரீதியாக பிரதேச ரீதியாக இவ்வாறான சட்டவிரோத மதுபாவனை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விழிப்புணர்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற போதும் மேலும் விழிப்புணர்வுகளைமுன்னெடுக்கவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு இவற்றைத்தடுக்கும் வகையில் அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கத் தயாராகவே இருக்கின்றோம்.

இவ்வாறு சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் அவற்றைக் கைவிட்டு ஒரு வாழ்வாதார உதவிகளை தெரிவு செய்து அதன்மூலம் வாழ்க்கையில் முன்னேற வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்போம். அதற்கு எப் போதும் நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.- என்றார். (எ)

## வீதியை மணல் மூடியதால் போக்குவரத்துப் பாதிப்பு!



பூநகரி, மண்ணித்தலை பகுதியில் வீதியை மணல் மூடியதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், கல்முனைக்கான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த பத்து நாள்களாக நிலைமை இவ்வாறே காணப்படுகின்றது என அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

அந்தப் பகுதியின் ஊடாகப் பயணிக்கும் வாகனங்கள் மணலில் புதைந்து அசௌகரியங்களை எதிர்கொள்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

## அரசைத் தோற்கடித்தாவது ஒப்பந்தத்தை கிழித்தெறிவோம்

### எச்சரிக்கிறார் ரில்வின்சில்வா



கொழும்பு, ஜூலை 31

அரசைத் தோற்கடித்தாவது அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கையை கிழித்தெறிவோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கும் உடன்படிக்கை கைச்சாத்திட்டது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் வளங்களை வெளிநாட்டவருக்கு விற்பனை செய்யும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக சகலரும் ஒன்றுபட வேண்டும்.

இந்த உடன்படிக்கையை நியாயப்படுத்த அரசு என்ன கதை கூறினாலும் அவற்றில் எந்தப் பலனும் இல்லை. இலங்கைக்குரிய சொத்தும், வளங்களும் இந்தநாட்டுக்கு உரித்தானவையாகும்.-என்றார். (எ)

## ஓட்டோக்களுக்கு மீற்றர் கட்டாயம்; வர்த்தமானி விரைவில்!

கொழும்பு, ஜூலை 31

பொதுப் பாவனையில் உள்ள ஓட்டோக்களுக்கான மீற்றர்களை கட்டாயப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்று வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.

வர்த்தமானி அறிவித்தலைத் தயாரிக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன என்று அந்தச் சபையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

அதேவேளை, இது தொடர்பான அறிக்கை போக்குவரத்து அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# நாட்டின் எதிர்காலத்தை நல்வழிப்படுத்த ஆரோக்கியமான மாணவ சமூகம் தேவை

### வவுனியா சுந்தரபுரம் பாடசாலை நிகழ்வில் வடக்கு சுகாதார அமைச்சர்



வவுனியா, ஜூலை 31

நாட்டின் எதிர்காலத்தை நல்வழிப்படுத்துவதற்கு ஆரோக்கியமான மாணவ சமூகத்தை உருவாக்குதல் வேண்டும். அவ்வாறானவர்களாலேயே இந்தச் சமூகத்தை எதிர்காலத்தில் நல்வழிப்படுத்த முடியும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் கிராம சேவகர் பிரிவிலுள்ள சுந்தரபுரம் (பழைய குடிமனை) அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வடிகட்டும் குடிதண்ணீர் இயந்திரத் தொகுதி திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கல்வி கற்ற சமூகமே நாட்டின் எதிர்காலத்தை நல்வழிப்படுத்த முடியும். அதற்கு மாணவர்களின் உள, உடல் நலம் சுத்தமானதாகவும், சுகாதாரமான தாகவும் பேணப்படுதல் வேண்டும். அப்படியானவர்களே எதிர்காலத்தில் நாட்டுக்கும், வீட்டுக்கும் சிறந்த பிரஜைகளாக இருக்க முடியும். சிறு பராயத்திலிருந்து நல்ல பழக்க வழக்கங்களை மாணவர்கள் பழகிக் கொள்ள வேண்டும். அத்துடன் சுத்தமான குடி தண்ணீர், போஷாக்கான உணவு இவை இரண்டும் முக்கியம்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நாள்பட்ட சிறு நீரக நோயின் தாக்கம் வயது வேறுபாடின்றி பலருக்கும் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு பலகாரணங்கள் இருந்தாலும் சுத்தமான குடிதண்ணீர் பருகாமையும் ஓர் காரணமாக கருதமுடிகிறது. இதனால் எனக்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதியில் குறிப்பிட்ட தொகையை குடிதண்ணீர் வடிகட்டும் இயந்திரத் தொகுதிகளை பாடசாலைகளில் அமைப் பதற்கு ஒதுக்கீடு செய்துவருகின்றேன். இதுவரை 18 பாடசாலைகளுக்கு இவ்வாறான இயந் திரத் தொகுதிகளை பொருத்து வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். இவ்வருடமும் 8 பாடசாலைகளுக்கு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வருடத்தின் முதல் பாடசாலையாக இந்த இயந்திரத் தொகுதியைதிறந்துவைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.- என்றார். (எ)

# மாகாண சபைகள் தமது அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்!

## முன்னாள் வடக்கு-கிழக்கின் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கூறுகிறார்

திருகோணமலை, ஜூலை 31

மக்களுக்கு சிறந்த ஆட்சியை வழங்குவதற்கு மாகாண சபைகள் தமது அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

-இவ்வாறு முன்னாள் ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கின் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாணசபைகள் தமக்கான அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான தீர்மானங்களைக் கொண்டு வரவேண்டும். இதன்மூலமே மாகாண சபைகள்தமக்கான பல அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.



கிழக்கு மாகாணத்தில் மூன்று இன மக்களும் ஒற்றுமையாக வாழ முடியும் என்ற தோற்றப்பாட்டை ஆட்சியாளர்கள் ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன், ஆட்சியாளர்களால் பாரபட்சமற்ற முறையில் மக்கள் நடத்தப்பட வேண்டும். ஆனால், இங்கு துரதிஷ்டவசமாக நிலைமை மாறாக உள்ளது. அது வருத்தமளிக்கின்றது.-என்றார். (ச)

# ஒலுவிலில் விபத்து: இளைஞன் சாவு!



ஒலுவில் வெளிச்ச வீட்டு வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் ஒருவர், நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

ஒலுவிலில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் வேலை செய்து வந்த வாழைச்சேனையைச் சேர்ந்த ஆர். இந்திரன் (வயது-18) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

ஒலுவில் பிரதான வீதியிலிருந்து வெளிச்ச வீடு வீதியாகச் சென்று கொண்டிருந்த டிராக்டரும், பிரதான வீதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் கைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயம் அடைந்தார்.

இதனை அடுத்து, படுகாயமடைந்த இளைஞன் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துடன் தொடர்புடைய உழவு இயந்திரத்தின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# வாழைச்சேனை கடதாசி ஆலைக்கு கிழக்கு ஆளுநர் ரோஹித விஜயம்!

வாழைச்சேனை,ஜூலை 31

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம நேற்றுமுன்தினம் வாழைச்சேனை கடதாசி ஆலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது, கடதாசி ஆலை நிர்வாகத்தினர் மற்றும் பிரதேசதிணைக்கள தலைவர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை அவர் மேற்கொண்டார்.

இதன் போது ஆளுநர் பேசுகையில்-

''வாழைச்சேனைக் கடதாசி ஆலையை மக்களுக்கு நன்மை சேர்க்கும் வகையில் பயன்டுத்துவதற்கு கிழக்கு மாகாண சபையின் ஊடாக உதவ நாங்கள் தயாராக உள்ளோம்.



''இந்தக் கடதாசி ஆலை அபிவிருத்தி செய்யப்படுவதன் மூலம் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பயனடைவர். மேலும், இதன்மூலம் பல்வேறு வேலை வாய்ப்புக்களையும் உருவாக்க முடியும்'' -என்றார். (ச)





மட்டக்களப்பு - கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்றத்தின் ஆரம்ப நிகழ்வுகளைப் படங்களில் காணலாம்.



## குமண காட்டு வழியூடாக

# கதிர்காம யாத்திரையில் 18,470 யாத்திரிகர்கள்!

உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து குமண காட்டுவழிப்பாதை ஊடாக இதுவரை 18 ஆயிரத்து 470 யாத்திரிகர்கள், கதிர்காம யாத்திரையில் இணைந்துள்ளனர் என குமண முன்னரங்கு காவலரண் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கதிர்காம யாத்திரைக்குச் செல்லும் காட்டு வழிப்பாதை, நாளைமறுதினம் புதன் கிழமையுடன் மூடப்படும் நிலையில், பெருந்திரளான பக்தர்கள் இந்த யாத்திரையில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நிலாவெளியில் கடலில் மூழ்கி இளைஞர் சாவு!



நிலாவெளி, ஜூலை 31

திருகோணமலை நிலாவெளிக் கடலில் குளிக்கச்சென்ற இளைஞர் ஒருவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

இந்தச்சம்பவத்தில் மருதமுனை கஸ்ஸாலி வீதியில் வசித்து வந்த 23 வயதான இளைஞரே உயிரிழந்தவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிலாவெளிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)




# கிழக்கிலங்கை படப்பிடிப்பாளர் காரியாலயம் மட்டு. அரசடியில்!

கிழக்கிலங்கை படப்பிடிப்பாளர் கலைக் கழக காரியாலயம் மட்டக்களப்பு அரசடியில் நேற்று முன்தினம் சனிக் கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது

படப்பிடிப்பாளர் கலைக் கழகத்தின் தலைவர்ரி. யோகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் வெ. தவராஜா, மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவர் எம். செல்வராஜா மற்றும் நிக்கோன் நிறுவனத்தின் இலங்கைக்கான சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# துப்பாக்கி முனையில் செங்கலடியில் கொள்ளை!

## 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் 'அபேஸ்'

மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில், கைத் துப்பாக்கியைக் காட்டி சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம், அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மேற்படி வீட்டுக்குள் திடீரெனப் புகுந்த மர்ம நபர்கள், வீட்டில் இருந்த பெண்ணைத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி அங்கிருந்த தங்க ஆபரணங்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் மொத்தப் பெறுமதி சுமார் 5 லட்சம் ரூபா என பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. இந்தச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர். (ச)

# இலங்கை – இந்திய ஒப்பந்தத்தால் அதன் நோக்கம் நிறைவேறியுள்ளதா?

## கேள்வி எழுப்புகிறது நாடு கடந்த தமிழீழ அரசு

கொழும்பு, ஜூலை 31

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவடையும் இந்த நேரத்தில் ஈழத்தமிழ்த் தேசம் தனது விடுதலைப் போராட்டப் பாதையில் இந் நிகழ்வின் தாக்கத்தையும் அதனுடன் கூடவந்த இடர்களையும் அழிவுகளையும் அசைபோட்டுப் பார்க்க வேண்டிய நிலையிலுள்ளது என்று நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் 29.7.1987 அன்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் 'இராஜதந்திரம்' என்ற பெயரில் இந்திய தேசத் தின் புவிசார் நலன்கள் அடையப்படுவதை மனதில் கொண்டதாய் அமைந்திருந்தது.

இந்த ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டே இலங்கை அரசமைப்பில் 13 ஆவது திருத்தம் உட்புகுத்தப்பட்டு மாகாணசபைகள் அறிமுகம் செய்யப்பட்டன. தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை நிலைநிறுத்த அவசியமான வடக்கும் கிழக்கும் இணைந்த நிலப்பரப்பும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதேநேரத்தில் இலங்கையில் தனது புவிசார் அரசியல் நலன்களை அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்துடன் இணைந்த வகையில் பின்னிணைப்புக்களை உள்ளடக்கும் ஏற்பாடுகளையும் இந்திய அரசு மேற்கொண்டிருந்தது.

பனிப்போர்க்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பின்னிணைப்புக் கடித ஏற்பாடு இலங்கையில் இந்தியாவை மீறிய வகையில் வேறு அந்நிய நாடுகள் ஆதிக்கமோ அல்லது செல்வாக்கோ செலுத்தாமல் தடுக்கும் நோக்கத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு



30 ஆண்டுகள் கடந்த இன்றைய நாளில் ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டமை யின் நோக்கம் ஏதும் நிறைவேறியிருக்கிறதா என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டியவர்களாக உள்ளோம்.

ஒப்பந்தம் சொல்ல வந்த அத்தனை தனித்தனி அம்சங்களும் புறக்கணிக்கப்பட்டன அத்தோடு தமிழீழ மக்கள்மீது நடத்தப்பட்ட கொடிய போரும் இன்றுவரை தொடரும் இனப் படுகொலையும் அவர்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகள் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்பது தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவை எல்லாவற்றையும் விட இலங்கையில் கடந்த 30 ஆண்டு காலத்தின்போது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சீனாவின் ஆதிக்கமும் செல்வாக்கும் வலுவடைந்துள்ளன.

ராஜபக்ஷ ஆட்சியில் மட்டுமல்லாது சிறிசேன-ரணில் கூட்டாட்சியிலும் இலங்கையுடனான சீன நட்புறவு மேலும் நெருக்கமடைந்துள்ளதோடு சீனாவினது ஒரு சாலை - ஓர் இணைப்பு என்ற பெயரில் ஆசிய கண்டத்தையே சுற்றி வளைக்கவுள்ள பெருந்தெருத் திட்டத்தை இந்தியா புறக்கணிக்கும் அதேவேளை, இலங்கை ஆர்வத்துடன் ஏற்று இணைந்து கொண்டுள்ளதும் கவனத்துக் குரியது.

இலங்கையில் தனது புவிசார் நலன்களை அடைந்து கொள்வதில் இந்தியா தோல்வியடைந்து வருகின்ற உண்மையும் ஈழத் தமிழ் மக்கள் மீதும் மண் மீதும் தொடர்ச்சியாக மேலெடுக்கப்படும் இனப் படுகொலைத் திட்டத்தை இந்திய தேசம் கண்டும் காணாமல் நடந்து கொள்வதும் எமக்குப் பெரும் ஏமாற்றமாகவே உள்ளன.

30 ஆண்டுகால நிறைவைக் குறிக்கும் வகையில் நாடுகடந்த தமிழீழ அரசு ஆய்வுக் கூட்டத் தொடர் ஒன்றை முன்னெடுத்து அரசியல் ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் என்போரைக் கொண்டு அரசியல் ஆய்வையும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளையும் பற்றிப் பேசவுள்ளது.- என்றுள்ளது. (எ)

# சம்பூரில் நிலைகொள்ளும் மரைன் பட்டாலியன்!



இலங்கைக் கடற்படையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள, மரைன் பற்றாலியன் படைப் பிரிவு, சம்பூரில் நிலை நிறுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, சம்பூரில் உள்ள எஸ்.எல்.என்.எஸ். விதுர கடற் படைத் தளத்தில் மரைன் படையினருக்கான விடுதி அறை, மூத்த மற்றும் இளைய அதிகாரிகளுக்கான உணவுக்கூடங்கள், நான்கு மாடிகளைக் கொண்ட நிர்வாக வளாகம் என்பன இலங்கைக் கடற்படைத் தளபதியால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டன.

மரைன் படையினருக்கான பயிற்சி மற்றும் நிர்வாகத் தேவைகளுக்கு ஏற்ற வசதிகளைக் கொண்டதாக இந்தத் தளம் மாற்றப்பட்டு வருகிறது.

சம்பூர் கடற்படைத் தளம் அமைந்துள்ள பகுதியில் தமிழ் மக்களின் காணிகள் பல இன்னமும் விடுவிக்கப்படாதுள்ளன. இந்த நிலையில், இலங்கைக் கடற்படையின் வலிமை வாய்ந்த படைப் பிரிவான, மரைன் படைப் பிரிவு அங்கு நிரந்தரமாக நிலைகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது மூடப்படாத உணவகங்கள் மீது நடவடிக்கை

## வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 31

டெங்கை கட்டுப்படுத்தும் புகை விசுறும்போது உணவகங்கள் மூடப்பட வேண்டும் இல்லையேல் அனைத்து உணவும் பறிமுதல் செய்யப்படும் என்று தெரிவித்தார் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் லவன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியாவில் டெங்கைக் கட்டுப்படுத்த புகை விசிறப்பட்டு வருகின்றது. இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முதல் அந்தப் பிரதேசத்தில் ஒலி பெருக்கி மூலமாக அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

எனினும், அதனை அசட்டை செய்யும் உணவக உரிமையாளர்கள் உணவகங்களைத் திறந்து வியாபாரத்தில் ஈடுபடுவதுடன் சுகாதார திணைகளத்தின் மீது குற்றம் சாட்டி வருகின்றனர்.

எனவே, டெங்கைக்கட்டுப்படுத்த புகைவிசுறும்போது உணவுப்பொருள்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதனால் உணவுப் பொருள்களை மூடி வைக்குமாறும் மூடாத உணவகங்களில் இருந்து உணவுப்பொருள்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படும்.-என்றார். (எ-100)

# வடகொரியாவுக்கு இலங்கை கண்டனம்

## ஏவுகணைச் சோதனை ஒப்பந்த மீறலால்

வடகொரிய அரசால் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஏவுகணை பரிசோதனைக்கு அரசு கண்டனம் வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்தக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் ஒப்பந்தங்கள் மீறப்பட்டுள்ளன என வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடகொரியா தொடர்ந்து சர்வதேசத்தின் சமாதானத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் ஏவுகணை பரிசோதனையில் ஈடுபடுகின்றது.

சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தி ஏவுகணை பரிசோதனையைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் யோசனைகளை மீறுவதன் ஊடாக பிராந்தியத்தின் நிலைப்பாட்டுக்கும் அது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும். சர்வதேச நாடுகள் இணைந்து இதற்காக விரைவான தீர்வு வழங்க வேண்டும்.-என்றுள்ளது. (எ)

# கட்சிச் செயலாளர்களுக்கு அவசர கூட்டத்துக்கு அழைப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரால்

கொழும்பு, ஜூலை 31

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, கட்சிகளின் செயலாளர்களுக்கான அவசர கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார். எதிர் வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி தேர்தல் திணைக்களத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பாகவே இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று கூட்டு எதிரணி வலியுறுத்தி வருகிறது. அரசும், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் தயாராக இருப்பதாகக் கூறியிருந்தது.

இதன் பின்னணியிலேயே தேர்தல்கள் ஆணைக் குழு கட்சிகளின் செயலாளர்களுக்கான கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. (எ)

# தமிழ் இலக்கிய கலைத்திறன் போட்டி

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் ஆண்டு தோறும் நடத்தப்படும் திருக்குறள்மாநாட்டையொட்டி தமிழ் இலக்கியக் கலைத்திறன் போட்டிகள் ஆண்டு 2 தொடக்கம் 12 வரை கல்வி கற்கும் மாணவர் மத்தியில் நடத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இவ் ஆண்டின் போட்டிகளுக்கான வேண்டுகைப் படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கண்டாவளை, பூநகரி கோட்டங்களுக்கான வேண்டுகைப்படிவங்களை அந்தந்த கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

நிறைவாக்கிய வேண்டுகைகளை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் எமது அறிவுறுத்தல் கடிதத்தில் குறிப்பிட்டவர்களிடம் கையளித்துதவுமாறும் இதற்கான தேர்வுகள் புரட்டாதித் திங்களில் நடைபெறும் எனவும் இப் போட்டிக்கான மாணவர் வாழ்வில் திருக்குறள் புத்தகத்தை கனகபுரம் வீதியில் அமைந்துள்ள சிவா பதிப்பகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தமிழ்ச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ப)

## தினசரி ராசி பலன் 31.07.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 16 ஆம் நாள் அஷ்டமித்திதி காலை 9.47 மணி வரை. பின்னர் நவமி. நட்சத்திரம். சுவாதி காலை 9.39 மணி வரை. பின்னர் விசாகம். அமிர்தயோகம் காலை 9.39 மணி வரை. பின்னர் அசுபயோகம் ராகுகாலம் காலை 7.35 மணி முதல் 9.09 மணி வரை. சுபநேரம். பகல் 12.04 மணி முதல் 1.34 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: ஆடி மாத வளர்பிறை நவமி.**

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. தொடங்கும் கருமங்கள் தாமதமாக நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகள் பின்தள்ளிப் போகும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை.

**ரிஷபம்:** இனிமையான நாள். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். நண்பர்கள், உறவினர்களின் சகாயம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்து உதவியால் பதவி உயர்வுகள் கிட்டும்.

**மிதுனம்:** மேன்மையான நாள். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். எதிர்பார்ப்போருக்கு மங்கல கருமம் கைகூடும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனையாகும்.

**கடகம்:** கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். கொடுத்த கடன்களை மீளப்பெறமுடியாத அவல நிலை காணப்படும்.

**சிம்மம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. குடும்ப அமைதி குறையும். உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு கானல் நீராக இருக்கும். பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும்.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கம். வியாபாரம் துரிதகதியில் நடக்கும்.

**துலாம்:** இன்பமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். பெண்களுக்கு விரும்பிய மணவாழ்க்கை அமையும்.

**விருச்சிகம்:** குழப்பமான நாள். மனம் குழப்ப நிலையில் இருக்கும். நண்பர்கள், உறவினர்களின் உதவிகள் குறையும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.

**தனுசு:** நன்மையான நாள். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு தானாக வரும். புதிய முதலீடுகளுக்கு நன்று வியாபாரம் சிறப்பாக நடக்கும். சுயதொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தினருக்கு தொழிலுக்கேற்ற ஊதியம் கிடைப்பது கடினம். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் போக்குக்கு ஏற்ப நடந்து கொள்வது நன்று.

**கும்பம்:** அனுகூலமான நாள். வெளிநாடுகளில் இருந்து பணம் வந்து சேரும். குடும்பம் சுகம் சிறப்பாக இருக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். திருமண காரியங்கள் பலிதமாகும்.

**மீனம்:** யோசனையான நாள். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் தேங்கிக்கிடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் குறையும்

**சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் அவசியம் சுபகருமங்கள் மேற் கொள்வதைத் தவிர்க்கவும்.**

# சொந்த மண்ணில் குடியேற உள்ள மக்களுக்கு ஒருபோதும் இடையூறு விளைவிக்கக் கூடாது!

## அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு



யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சொந்த மண்ணில் குடியேற உள்ள மாந்தைப் பகுதி மக்களுக்கு ஒருபோதும் இடையூறு விளைவிக்கக் கூடாது.

-இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மாந்தை மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து சுமார் 30 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் தமது சொந்த மண்ணைத் தேடி வந்துள்ளனர். பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும், மக்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கும் அனைவரும் இணைந்து ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். இனவாதம், மதவாதம் இன்றி அனைவரும் ஒற்றுமையாக நடந்து கொள்ளவேண்டும்.

மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள பல ஏக்கர் கணக்கான காணிகள் வனவளத் திணைக்களத்தால் உள்வாங்கப்பட்டுள்ளன என மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். எதிர்வரும் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாட உள்ளோம்.

மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற அதிகாரிகள் பலர் இந்த அபிவிருத்திக்குழுக் கூட்டத்துக் குச் சமுகமளிக்கவில்லை. பல்வேறு திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வருகை தந்துள்ளனர். ஆனால், முக்கிய சில திணைக்களங்களைச் சேர்ந்த எவரும் கலந்து கொள்ள வில்லை. எதிர்காலங்களில் இடம்பெறும் இவ்வாறான கூட்டங்களுக்கு திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்து கொள்ள வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள், அனைவரும் இணைந்து இந்தப் பிரதேசத்தைக் கட்டி எழுப்புவதற்கு தயாராக இருக்கின்றனர். மக்கள் அதிகாரிகளுக்கு உரிய கௌரவத்தைக் கொடுத்து அவர்களுடன் உறவாடுகின்றபோது அவர்கள் மன நிறைவுடன் தமது கடமைகளை மேற்கொள்வார்கள்.

-என்றார். (ச)

# மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த 3 ஆயிரம் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும்!

## தேசிய நல்லிணக்கத்துறை அமைச்சர் மனோ கணேசன் வேண்டுகோள்



கொழும்பு, ஜூலை 31

மும்மொழி அமுலாக்கல் கொள்கையை நடைமுறைப் படுத்த அரசநிறுவனங்களுக்கு சுமார் 3 ஆயிரம் அதிகாரிகளை நியமிக்கவேண்டும்.

-இவ்வாறு தேசிய நல்லிணக்கத்துறை அமைச்சர் மனோ கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த அதிகாரிகளை நியமிக்காமல் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்றமை கடினமான பணியாகவே இருக்கும். இந்த பதவிகளுக்கு கல்விப்பொதுத் தராதர உயர் தர சித்திகளுடன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் புலமைப் பெற்றவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இந்திய மீனவர் ஐவருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

மன்னார், ஜூலை 31

இலங்கை கடற்பரப்புக் குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் தலைமன்னார் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 5 பேருக்கு தொடர்ந்து விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 05.01.2017 அன்று 5 பேர் இழுவைப் படகில் இறால் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவர்கள் தலைமன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கை கடற் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட அவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்து வரப்பட்டு பின் மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

அதைத்தொடர்ந்து மன்னார் கடற்தொழில் நீரியல்வள அதிகாரிகள் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து மன்னார் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி இருந்தனர். ஐந்து பேரில் இருவர் சிறுவர்கள்.

இரு சிறுவர்களும் மன்னார் அன்னை இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தனர். ஏனைய மூவரும் சிறைச்சாலை காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், ஐந்து பேரையும் கடந்த 28 ஆம் திகதி மன்னார் நீதிவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத் தியபோது எதிர்வரும் 11 ஆம் திகதி வரை மூவரையும் தொடர்ந்து விளக்கமறியலிலும் இரு சிறுவர்களை அன்னை இல்லத்திலும் வைக்குமாறு நீதிபதி உத்தரவு பிறப்பித்தார். (எ-112)

## 'பாரம்பரியத்தைத் தேடி விழிப்புணர்வு செயற்றிட்டம்


யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகார சபையினரால் ''பாரம்பரியத்தைத் தேடி'' எனும் விழிப்புணர்வுச் செயற்றிட்டம் ஒன்று நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9 மணிக்கு, யாழ்ப்பாணம் பிரதேசசெயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாண தொல்லியல் திணைக்களவலய அலுவலகர்களான பா.கபிலன், ந.அருள்ராஜ் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (இ)


# ராஜீவ் படுகொலை வழக்கு:

## வாக்குமூலத்தில் அவர்கள் சொன்னதை எழுதவில்லை தவறு செய்து விட்டேன்!

–விசாரணை அதிகாரி

‘தவறு செய்து விட்டோம்’! வழக்கை விசாரணை செய்து தண்டனையை உறுதி செய்த நீதிபதி தோமஸ் ஓய்வு பெற்ற பின் கூறுகிறார்





# 26 வருடங்களாக சிறைக் கூண்டில்! இனி எங்கே நீதி?

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்கி வரலாற்று சிறப்புமிக்கத் தீர்ப்பை வழங்கியிருக்கிறது ஐரோப்பிய ஒன்றிய தலைமை நீதிமன்றம்! 10 ஆண்டுகளுக்குப் பிறகு, கிடைத்திருக்கும் நல்லதொரு தீர்ப்பு இது.

இந்தியாவில், ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு ’விடுதலைப் புலிகள் அமைப்பு’, பயங்கரவாத அமைப்பாகக் குற்றம் சுமத்தப்பட்டு தடை செய்யப்பட்ட இயக்கமாகவே தொடர்ந்து வருகிறது.

ராஜீவ் படுகொலைச் சம்பவம் நிகழ்ந்து கால் நூற்றாண்டைக் கடந்துவிட்ட பின்னரும்கூட இவ்வழக்கில், பல்வேறு மர்ம முடிச்சுகள் இன்னமும் அவிழ்க்கப்படாமலேயே தொடர்கின்றன. வழக்கை புலன் விசாரணை செய்த ஜெயின் கமிஷன் அமைத்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணை இன்னும் தொடர்கிறது. ஆனால், அதன் பிறகும் கூட இவ்வழக்கில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

ஏற்கெனவே குற்றம் சாட்டப் பட்ட பேரறிவாளன், முருகன், நளினி, சாந்தன், ரொபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் உள்ளிட்ட ஏழு பேரும் கடந்த 26 ஆண்டுகளாக சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார்கள். இவர்கள், பரோலில் வெளியே வருவதுகூட பல்வேறு அரசியல் காரணங்களால் தடைபட்டுக் கொண்டே போகிறது.

‘ராஜீவ் படுகொலை வழக்கை விசாரணை செய்த அதிகாரி,’ குற்றவாளிகள் தரப்பிலான வாக்குமூலமாக அவர்கள் சொன்னதை நாங்கள் பதிவுசெய்யவில்லை’ என்று இப்போது சொல்கிறார். வழக்கை விசாரித்து தண்டனையை உறுதிசெய்த உச்ச நீதிமன்ற நீதிபதியோ, ’யாருக்கும் தண்டனை கொடுக்கப்படாமல் இருந்தால், அது தவறாக நினைக்கப்படும் என்ற எண்ணத்தில் அப்படியொரு தீர்ப்பை அளித்துவிட்டோம்’ என்று இப்போது வருத்தப்படுகிறார்.

இந்நேரத்தில், ‘விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை இந்தியாவும் விலக்கவேண்டும்’ என்று கோரிக்கை வைத்திருக்கும் தமிழர் தேசிய இயக்க முன்னணித் தலைவர் பழ.நெடுமாறன், ராஜீவ் படுகொலை வழக்குக் குறித்தான விஷயங்கள் குறித்துப் பேசுகிறார் இங்கே....

ராஜீவ் படுகொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக உச்ச நீதிமன்றத்தில் நாங்கள்தான் வழக்கு நடத்தினோம். இந்தியாவில் உள்ள 5 மூத்த வழக்கறிஞர்களுள் மிகவும் மூத்தவரான என்.நடராஜன்தான் எங்கள் தரப்பில் வாதாடினார்.

கே.டி.தோமஸ் தலைமையிலான 3 நீதிபதிகளைக் கொண்ட அமர்வுதான் விசாரித்தது. அப்போது 3 நீதிபதிகளுமே, ’இது ஒரு சாதாரண கிரிமினல் வழக்கு. தடா சட்டத்தின் கீழ் இவ்வழக்கு போடப்பட்டுள்ளது செல்லாது’ எனத் தீர்ப்பளித்தனர்.

இப்படியொரு தீர்ப்பை அவர்கள் அளித்ததற்கு காரணம் இருந்தது. அதாவது, ‘ராஜீவ் படுகொலை பயங்கரவாத செயலாகக் கருதப்படுமேயானால், அதன் தொடர்ச்சியாக நாட்டில் பல்வேறு வகையான குழப்பங்கள், கொலைகள், கலவரங்கள் நடந்திருக்க வேண்டும். ஆனால், இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அப்படியான நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை.

இது தனிப்பட்ட நபர்களுக்கு இடையிலான விருப்பு வெறுப்பு அடிப்படையில் நடைபெற்ற கொலைச் சம்பவம்தான். எனவே, இதனை கிரிமினல் சட்டத்தின் அடிப்படையில்தான் வழக்குப் பதிவு செய்திருக்க வேண்டும். தடா சட்டத்தின் கீழ் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தியது செல்லாது’ எனத் தெளிவாக அறிவித்துவிட்டனர். ஆனாலும் குற்றம் சாட்டப்பட்டிருந்தவர்களில் 3 பேருக்கு ஆயுள் தண்டனை, 4 பேருக்குத் தூக்குத் தண்டனை என்று தீர்ப்பில் கூறப்பட்டது.



முருகன் பேரறிவாளன் சாந்தன்

நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்

இந்த வழக்கு தடா சட்டதின் கீழ் போடப்பட்டது செல்லாது’ என்று கூறிய நீதிமன்றம், அந்தத் தடா சட்டத்தின் கீழ் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில், இவர்களுக்குத் தண்டனை விதித்தது எப்படி சரியாகும்? எனவே, ‘குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்’ எனக் கோரி மறு ஆய்வு மனுத் தாக்கல் செய்தோம்.

இதுதான் எங்களுக்கான கடைசி வாய்ப்பு. ஆனாலும்கூட அந்த மறு ஆய்வு மனுவை கே.டி.தோமஸ் தலைமையிலான 3 நீதிபதிகளைக் கொண்ட அமர்வு விசாரிக்க மறுத்து தள்ளுபடி செய்துவிட்டது.

அடுத்தகட்டமாக இதே வழக்கை வேறு நீதிபதிகளும் விசாரிக்கமுடியாது. எனவே, தூக்குத் தண்டனையில் இருந்து சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்கக் கோரும் கருணை மனுவை தமிழக ஆளுநருக்கு எழுதினோம்.

அப்போது ஆளுநராக இருந்த ஃபாத்திமா பீவி, ஒரே வாரத்தில், இந்த 4 பேர் மீதான கருணை மனுவையும் எந்தவித உறுதியும் செய்யாமல், தள்ளுபடி செய்துவிட்டார். உடனே, நாங்கள் ஆளுநரின் செயற்பாடு குறித்து கேள்வி எழுப்பி’ சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தோம். அப்போது வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த மூத்த வழக்கறிஞரான சந்துருதான் எங்கள் தரப்பில் வாதாடினார்.

‘அமைச்சரவை கூடி என்ன பரிந்துரை செய்கிறதோ அதை ஏற்றுக் கொண்டுதான் ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ செயற்பட வேண்டும். மற்றபடி அவர்களாகத் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது’ என்று வாதம் வைத்தார் சந்துரு.

அரசுத் தரப்பிலோ, ’அரசியல் சட்டம் அமுல்படுத்தப்பட்டு இந்தியா குடியரசு நாடாக ஆனதிலிருந்து, குடியரசுத் தலைவரும் ஆளுநர்களும்தான் 700 இற்கும் மேற்பட்ட கருணை மனுக்களில் முடிவு எடுத்திருக்கிறார்கள். ஒருமுறைகூட எந்த மாநில அமைச்சரவையோ, மத்திய அமைச்சரவையோ இதில் தலையிடவில்லை. எனவே இப்போதும் தமிழக ஆளுநர் எடுத்த முடிவு சரிதான்’ என்று பதில் வாதம் வைத்தனர்.

‘இதுவரை நீங்கள் தவறு செய்திருக்கலாம். நாங்கள் இந்த 4 பேருக்காக வாதாடவில்லை. தொடர்ந்து நீங்கள் அரசியல் சட்டத்தை மீறிச் செயல்படுகிறீர்கள் என்பதை எடுத்துக்காட்டத்தான் வாதாடுகிறோம்’ என்றார் சந்துரு. இறுதியில், ’கருணை மனுவை ஆளுநர் நிராகரித்தமை செல்லாது’ என்ற தீர்ப்பும் கிடைத்தது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி இரக்கம் காட்டியதன் பேரில், நளினிக்கு மட்டும் மரண தண்டனையிலிருந்து ஆயுள் தண்டனையாகக் குறைத்தார் அப்போதைய தமிழக முதல்வரான கருணாநிதி.

அடுத்ததாக, சதாசிவம் தலைமை நீதிபதியாக இருந்தபோது, மீதமிருந்த 3 பேரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றிவிட்டுப் போனார். கால் நூற்றாண்டைக் கடந்து இப்போதுவரை 7 பேரும் சிறைவாசம் அனுபவித்துவருகிறார்கள்.

> இந்தியாவில் பிரதமராக இருந்தவர், படுகொலை செய்யப்பட்ட வழக்கில், யாருக்கும் தண்டனை கொடுக்கப்படாமல் இருந்தால், அது தவறாக நினைக்கப்படும் என்ற எண்ணத்தில் அப்படியொரு தீர்ப்பை அளித்து விட்டோம்’ என்று இப்போது வருத்தப் படுகிறார் நீதிபதி.

உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது போல், ராஜீவ் காந்தி படுகொலையை சாதாரண கிரிமினல் வழக்காகப் பதிவுசெய்திருந்தால், இவ்வழக்கு முதலில், மாஜிஸ்திரேட் நீதிமன்றில் நடைபெற்றிருக்கும்; அதன்பிறகு செஷன்ஸ் கோர்ட்; அங்கும் சரியான தீர்ப்பு கிடைக்காவிடில், உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றம்வரையிலும் சென்று வாதாடி நீதியைப் பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

ஆனால், தடா வழக்கின்கீழ் பதிவு செய்யப்பட்டுவிட்டதால், தடா கோர்ட் தீர்ப்புக்குப் பிறகு நேரடியாக உச்ச நீதி மன்றத்துக்குத்தான் செல்லமுடிந்தது. இதனால், குற்றம் சாட்டப்பட்டிருந்தவர்கள் நீதி பெறுவதற்கான பல வாய்ப்புகள் மறுக்கப்பட்டுவிட்டன என்றே சொல்லவேண்டும்.

(14 ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir



# காட்டுமிராண்டிகளாக மாறிவரும் எம்மவர்கள்!

## முதலமைச்சர் 'விக்கி' வேதனை

### சினிமாவாலும் சீரழிந்து வருகிறது யாழ்ப்பாண இளம் சமூகம்

தற்போதைய சினிமாத் துறை வன்முறையையும் பலாத்காரத்தையும் ஏனையவர்களை மதிக்காத தன்மையையும் போற்றிப் பாராட்டுவதற்கு உகந்ததாக அமைகின்றன.

இவ்வாறான சூழலிலேயே எம்மவர்கள்- யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் கேவலம் மிக்கவர்களாக, காட்டுமிராண்டிகளாக மாறி வருகின்றமை கவலைக்குரியது. முன்னர் படித்தவர்கள், பண்பட்டவர்கள், இங்கிதம் தெரிந்தவர்கள், நேர்மையானவர்களாக இருந்தவர்கள் இவ்வாறான நிலைக்கு ஆளாகி வருகின்றமை வேதனைக்குரியது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தையொட்டிய கந்தபுராண எழுச்சி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடந்த இந்த விழா நிகழ்வில் முதலமைச்சர் உரையாற்றும் போது கூறியவை வருமாறு:-

இயந்திரவேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்தப் புதிய உலகில் இளையசமூகம் செல்லுகின்ற பாதை சரியானதா தவறானதா என்று சிந்திக்கக் கூடநேரம் அற்ற நிலையில் ஓடிக் கொண்டிருக்கின்றது.இவ் இளைய சமூகத்தினருக்கு இயற்கையில் இருந்து தாம் விடுபட்டு வெகுதூரம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதுதெரிவதில்லை. கையில் இருக்கும் கருவிகளே காத்திரமானவை என்ற கருத்தில் உலா வருகின்றனர். ஆகவே, வாழ்வியல் தத்துவங்களையும் வாழ்வியல் முறைமைகளையும் சமயத்தின் பால் கூடிய ஈடுபாடுகளையும் அவர்கள் மத்தியில் ஏற்படச் செய்ய வேண்டியதற்கான அவசியம் எழுந்துள்ளது.

### இளம் சமூகத்தினரின் வெறுப்புக்குக் காரணம்

சமயங்கள் வெறுஞ் சடங்குகளாக மாறியதால் தான் இளம் சமூகத்தினர் அவற்றை வெறுக்கின்றார்கள். சமயம், மதம் ஆகியன எமக்குஎன்ன நன்மையைத் தரமுடியும் என்று கேட்கின்றார்கள். சமயம் உங்களை அமைதி உடையவர்களாக மாற்றும், அன்பு செலுத்துபவர்களாக மாற்றும், ஆன்ம சிந்தனையுடையவராக மாற்றும், உண்மைக்குக் கட்டுப்பட்டவராக மாற்றும், நீதி வழி செல்பவராக மாற்றும் என்று அவர்களுக்கு நாம் எடுத்துக் கூற முன்வரவேண்டும். அதற்கு எமது வாழ்க்கைமுறை உதாரணங்களாக அமையவேண்டும். எனவே இனியதோர் உலகத்தைப் படைக்கும் பெரும் பொறுப்பு சமய ஆர்வலர்களிடமும் அறிவுசால் பெருந்தகைகளிடமும் அனுபவ முதிர்ச்சி பெற்ற பெரியோர்களிடமும் எங்கள் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறக்கக்கூடாது.

இன்று இளைஞர் யுவதிகளின் நடவடிக்கைகளைஉற்றுநோக்கும் போது பய உணர்வு எமக்கு ஏற்படுகின்றது. காரணம் அவர்கள் நாம் இளமைக் காலங்களில் இருந்தது போல் இல்லாமல் பலபுறச் சூழல் பாதிப்புக்களால் நலிவடைந்துள்ளார்கள். அவர்களின் இந்த நிலையைத் தொடரவிட்டால் அவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகின்றது என்ற கேள்வி இயற்கையாகவே எழும்.


### கேவலம்மிக்கவர்களாக மாறி வரும் யாழ். தமிழர்

இற்றைக்கு 40, 50 வருடங்களுக்கு முன்னர் படித்தவர்கள், பண்பட்டவர்கள், இங்கிதம் தெரிந்தவர்கள், உண்மையானவர்கள், நேர்மையான வர்கள்எனப் பல சிறப்புப் பட்டங்களை தம்மகத்தே கொண்டிருந்த யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் இன்று மிக்க கேவலம் நிறைந்தவர்களாக, கல்வி அறிவுகளில் பின்தங்கியவர்களாக, காட்டு மிராண்டித்தனமான செயல்களில் ஈடுபடக் கூடியவர்களாக மாறி வருகின்றமை எம்மைத் திகைக்க வைக்கின்றது. இவ்வாறான பிள்ளைகளை அவர்களின் பெற்றோர்களும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாத நிலையில் ஏங்கித் தவிக்கின்றனர். அவர்களைத் திருத்தி நல்லவர்களாக மாற்றி கல்வியில் கூடிய கரிசனையுடையவர்களாக மாற்றியமைப்பதற்கு என்ன செய்யலாம் என்ற கேள்வி முதியவர்கள் யாவரையும் இன்று பீடித்திருக்கின்றது.

ஒரு சில விடயங்களை நாங்கள் புரிந்து கொள்ளவேண்டும்.அன்றிருந்த நிலை இனிஎன்றென்றும் வரப்போவதில்லை. நாம் வன்முறைகளைக் கண்டு அதன் சூழலில் வளர்ந்துவந்து விட்டோம். எனவே வன்மம் எமது மனதிலே தேங்கியிருப்பதைநாம் உணர வேண்டும். பயமும் பீதியும் எம்மைப் பீடித்திருப்பதை நாம் உணர வேண்டும்.

பயம் எமது நடவடிக்கைகளை ஆற்றுப்படுத்தி வருவதையும் நாம் உணரவேண்டும். காமத்துடன் இயைந்த பாலுணர்வும் போதைப் பொருள் மற்றும் சாராய நாட்டமும் எமக்குப் பாதிப்பைத் தந்து வந்துள்ளன என்பதையும் உணர வேண்டும்.

> ஒரு சில விடயங்களை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அன்றிருந்த நிலை இனி என்றென்றும் வரப்போவதில்லை. நாம் வன்முறைகளைக் கண்டு அதன் சூழலில் வளர்ந்து வந்து விட்டோம். எனவே வன்மம் எமது மனதிலே தேங்கியிருப்பதைநாம் உணர வேண்டும். பயமும் பீதியும் எம்மைப் பீடித்திருப்பதை நாம் உணர வேண்டும்.



இவ்வாறு எமது நிலையை நாம் உணரத் தலைப்பட்டால் பாதிக்கும் அந்த நிலைகளில் இருந்துவிடுபடலாம்.

### அகந்தை அழிவைத் தரும்; புராணங்கள் கூறுகின்றன

இங்குதான் எமது முன்னோர்கள் எமக்கு உவந்தளித்த காவியங்களும், புராணங்களும் உதவி அளிக்கின்றன என்று கூறலாம். இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களும் கந்தபுராணம் போன்ற புராணங்களும் அவற்றின் கதாபாத்திரங்கள் மூலம் எமக்குச் சிலசெய்திகளை அறிவிக்கின்றன. இந்த இந்தக் குணங்கள் இருந்தால் இந்த இந்தப் பாதிப்புகளையும் பயன்களையும் அடையவேண்டியிருக்கும் என்று அவை கூறுகின்றன.

அகந்தை அழிவைத்தரும் என்கின்றன. அன்பு அகிலத்தைக் கட்டிக் காக்கும் என்கின்றன. காவியங்களும் புராணங்களும் எங்களை எங்களுக்கு அடையாளம் காணவைக்கும் அபூர்வ நூல்கள்.

எமதுஆலயங்களில் சில காலங்களுக்கு முன்பு கந்தபுராணப் படிப்பு, பிள்ளையார் கதை,பெருங்கதைப் படிப்புக்கள் எனப் பல புராண படிப்புக்களை ஓதுவார்களும் சட்டம்பிமாரும் எமக்குத் தந்துதவினர். ஒருவர் புராண படலங்களை சுருதியுடன் படிக்க மற்றையவர் அதற்குப் பயன் கூறுவதும் அதனை அடியவர்கள் சூழவிருந்து கேட்டு இன்புற்று மீள்வதும் அன்றாட காட்சிகளாக அமைந்திருந்தன. நல்லூர் ஆலய முன்றிலில் இப்போதும் கூட அவ்வாறான சில புராணப் படிப்புக்கள் அதற்குரிய பயன் சொல்லுதல் போன்றநிகழ்வுகள் நடைபெறுவதையும் அதனை செவிமடுப்பதற்கு இரண்டுஅல்லது மூன்று முதியவர்கள் மட்டும் அமர்ந்திருப்பதையும் அவதானித்திருக்கின்றேன்.

### தரம் தாழ்ந்து போயுள்ள இளைய தலைமுறையை மாற்ற முயல்வோம்

அந்த நிலைமாற வேண்டும்: கதா காலட்சேபங்கள் மீண்டும் எமது இளைஞர் யுவதிகளுக்கு வாழ்க்கை பற்றி எடுத்துக் கூற முன்வரவேண்டும். நான் சிறுவயதில்,பின்னர் நல்லூர் ஆதீன முதல்வராய்ப் பதவி ஏற்ற மணி பாகவதரின் கதாகாலட்சேபங்களைத் தேடிச் சென்றுகேட்டு பயன் அடைந்தவன்.

புராணங்கள் எம்மை எமக்கு உணர்த்தும் கண்ணாடிகள் என்றுநான் சிறுவயதில் இருந்தே புரிந்து கொண்டேன். இன்றைய இளம் சமுதாயத்தினர் கந்தபுராணத்தைப் புதிய கோணத்தில் இருந்து பார்க்கப், படிக்க நாங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். புராணத்தின் கதா பாத்திரங்கள் எவ்வெவற்றை எமக்குப் பாடங்களாக மறைமுகமாகக் கூறப் பார்க்கின்றன என்பதை நாம் இளைஞர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

எமது இளையசமூகம் சமூக ஒருமைப்பாட்டுடனான ஒரு பண்பட்ட தலைமுறையாக மாற முயல வேண்டும். எமது இளைஞர் யுவதிகள் இயற்கையிலேயே சிறப்பானவர்கள். அவர்களின் நடவடிக்கைகளை குழப்புவதற்கும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளில் ஈடுபட வைப்பதற்கும் திட்டமிட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கோடிகள் முனைவது வெளிப்படையாகத் தெரிகின்ற போதும் இளைய சமூகத்தினரை ஆற்றுப்படுத்த நாம் எடுக்கின்ற முயற்சிகள் போதுமானதாக இல்லை.

### சீரழிக்கும் சினிமா

இந்நிலையில் தமிழ் நாட்டில் இருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் தமிழ்ச் சினிமாக்களும் கூடுதலான குழப்பங்களை உண்டு பண்ணுகின்றன. தத்துவங்களையும் பண்பாடுகளையும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய சினிமாத்துறை வன்முறையையும் பலாத்காரத்தையும் ஏனையவர்களை மதிக்காததன்மையையும் போற்றிப் பாராட்டுவதற்கு உகந்ததாக அமைகின்றன. ரஷ்யா, சீன, கோரிய, போலந்துப் படங்கள் சமூக நட்பு றவையும் அன்பையும் பாசத்தையும் வெளிக்கொணர முயல்கின்றன. நாமோ வன்முறைகளுக்கே முக்கியத் துவம் கொடுத்து சினிமாக்களை எடுக்கின்றோம். குங்பூ ,கராத்தே போன்ற தற்காப்புப் பாதுகாப்பு சம்பந்தமான சினிமாக்கள் வேறு. வன் செயல்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சினிமாக்கள் வேறு.

பாதிப்புக்கள் தரும் எமதுசூழலில் இருந்துஎமதுஇளையதலை முறையை காப்பாற்றவேண்டுமாயின் ஆலய சூழல்களும் அங்குநடைபெறும் ஆன்மீக உரைகளும் கருத்தரங்கங்களுமே அவர்களுக்கு நல்வழியை காட்ட வல்லன என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அந்தவகையில் இன்றையதினம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்ற இந்த நல்லநிகழ்வுகள் மிகச் சிறப்பாகவும் பொருள் பொதிந்ததாகவும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்த வல்லனவாகவும் அமைய நல்லூர் முருகப் பெருமானை வேண்டி வணங்கி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

50



## அத்தியாயம் - IV

### சிங்கள இராணுவப் படையெடுப்பு

மக்கள் அடர்த்தியாக வாழும் வடமராட்சி மீது சிறீலங்கா அரசு தனது கூட்டுப் படைத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டதோடு, தமிழ் மக்களின் பாதுகாப்பை அது முற்றாகப் புறக்கணித்தது. பிரபாகரனுடையதும், பல புலித் தளபதிகளினுடையதும் சொந்த இடம் வடமராட்சியே. வடமராட்சி மக்களைத் தண்டித்து, புலிகளுக்கு அவர்கள் வழங்கும் ஆதரவை முறியடிப்பதே இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அந்த வேளையில், வடமராட்சியில் இருந்த புலிப் போராளிகளின் தொகை மிகச் சிறியதே. ஆனால், அவர்களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட அரச படைகளின் எண்ணிக்கையோ மிகப் பெரியது. இதுவும் அரசின் உள் நோக்கத்தை வெளிப்படுத்தியது. யாழ்ப்பாணத்தில் இருந்து எம்மை வந்தடைந்த செய்திகளின் படி, ஆயிரமாயிரம் அரச படையினர் மிகக் கொடூரத் தாக்குதலைத் தொடுத்திருந்தனர். பெருந்தொகைப் பொதுமக்கள் காயமடைந்தும் பலியாகியும் இருந்தார்கள். பெருமளவு சொத்துக்களும் அழிக்கப்பட்டிருந்தன. எரியூட்டும் குண்டுகள் கண்மூடித்தனமாக விமானத்தில் இருந்து பொழியப்பட்டன. இடைவிடாத பீரங்கிக் குண்டுகளும் ஏவப்பட்டன. ஒரு சிறிய புவியியற் பரப்பின் மீது பெரிய தாக்குதல் குவிக்கப்பட்டது. பலத்த சேதம் விளைந்தது. கண்மூடித்தனமான பேரழிவை ஏற்படுத்துவதே அரசின் நோக்கம் என்பது புரிந்தது.

பாதுகாப்பற்ற கரையோரத் தமிழ்க் கிராமங்கள் மீது கடலிலே இருந்து கடற்படைப் பீரங்கிப் படகுகள் ஏவிய எறிகணைகள் பொதுமக்களையே இலக்காகக் கொண்டிருந்தன. சிறிலங்கா இராணுவம் வடமராட்சியை ஆக்கிரமித்த பின், அது நடத்திய தேடுதல்களும், சுற்றி வளைப்புகளும், இளைஞர்களைக் கைதுசெய்து சிங்களத் தெற்கில் உள்ள வெவ்வேறு சிறைகளுக்குப் பிரித்து அனுப்பி வைப்பதும், அச்சம் தரும் நடவடிக்கைகளாகவே அமைந்தன. இராணுவத் தாக்குதல் பொதுமக்களையே இலக்காகக் கொண்டிருந்தது என்பதை நிரூபித்தது. இராணுவச் சுற்றி வளைப்புகளின் போது தமிழ் இளைஞர்கள் காணாமற் போயிருக்கிறார்கள். அவ்வாறே சிங்களத் தெற்கில் உள்ள வெவ்வேறு தடுப்பு முகாம்களிலும் சிறைகளிலும் தமிழ் இளைஞர்கள் காணாமற்போயிருக்கிறார்கள். இவற்றை மனித உரிமை அமைப்புக்கள் விளக்கமாகப் பதிவு செய்திருக்கின்றன.

வடமராட்சியை ஆக்கிரமித்த சிறிலங்கா இராணுவப் படைகள் யாழ்ப்பாண தீபகற்பத்திலும் மேலும் அடர்த்தியாக மக்கள் வாழ்ந்த பகுதியான வலிகாமம் மீதும் தனது நடவடிக்கையைத் தொடங்கியது. விடுதலைப் புலிகளும் தங்கள் பங்குக்கு வடமராட்சிக்குள் ஊடுருவினார்கள். ஆக்கிரமிக்கும் இராணுவம் மீது கெரில்லாத் தாக்குதல்களை நடத்தி பலத்த உயிர்ச் சேதத்தையும் விளைவித்தார்கள். ஆக்கிர



மிப்பாளருக்கு எதிரான ஒரு முக்கிய பதிலடித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் முதற் தடவையாக கரும்புலித் தாக்குதல் அணியையும் பயன்படுத்தினார்கள். வடமராட்சி இராணுவத் தலைமைப் பணிமனை மீது நிகழ்த்தப்பட்ட இந்தத் திகிலூட்டும் தாக்குதலில் கப்டன் மில்லர் தாமாகவே முன் வந்து தமது உயிரைக் கொடை புரிந்து விடுதலைப் புலிகளின் முதல் கரும்புலியானார். வடமராட்சி கரவெட்டி வாசியான கப்டன் மில்லர், சிறிலங்கா இராணுவத்தின் புதிய தலைமைப் பணிமனைகளை உள்ளடக்கியிருந்த நெல்லியடி மத்திய கல்லூரிக்குள் வெடிபொருள் நிரம்பிய லொறி வண்டி ஒன்றை வேகமாக ஓட்டி மோதினார். அதனால் ஏற்பட்ட வெடி கட்டடத்தைத் தரைமட்டமாக்கியது. நூற்றுக் கணக்கான அரச படையினரைக் கொன்றது. அந்தப் பகுதியில் இராணுவ ஆக்கிரமிப்பையே நிலை குலையச் செய்தது. விடுதலைப் புலிகளின் போராட்டப் பதிவேட்டில் 1987 ஜூலை, ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும்.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையின் தாக்கத்தை அங்கலாய்ப்போடு புதுடில்லி பார்த்துக் கொண்டிருந்தது. தமிழ்ப் பொது மக்களுக்கு எதிரான வன்முறைகள் வளர்ந்து செல்வதும், மக்கள் மீது பொருளாதாரத் தடை ஏற்படுத்தும் கொடிய தாக்கங்களும் புதுடில்லியில் அச்சத்தைத் தோற்றுவித்தன. யாழ்ப்பாணக் குடாநாடு மீது கொழும்பு நடத்தும் இராணுவ நடவடிக்கை தொடர்பாகப் புதுடில்லி வெளியிட்ட கண்டன அறிக்கையில், சிறிலங்கா பாதுகாப்புப் படைகளால் இன அழிப்பு மேற்கொள்ளப்படுகிறது என்ற தொனி காணப்பட்டது. பெருந்தொகையான தமிழ்ப் பொதுமக்கள் உயிர்சேதத்துக்கு ஆளாகி வருகின்றமை தொடர்பாக இந்தியா தெரிவித்த ஆழ்ந்த கவலைக்கு சிறிலங்கா அரசு பதிலளிக்கத் தயங்கிக் கொண்டிருந்தது. ஈழத் தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா தலையிட வேண்டும் என பரந்து பட்ட இந்திய மக்களிடமிருந்து எழுந்த நெருக்குவாரமும் புதுடில்லியை நிர்ப்பந்தித்தது. எனவே, யாழ்ப்பாணத்தில் முற்றுகைக்கு உள்ளான தமிழ் மக்களுக்கு, மனிதாபிமான உதவிகளுடன் 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் திகதியன்று ஒரு கூட்டம் படகுகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. பொருளாதாரத் தடையாலும் இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளாலும் மக்களுக்கு ஏற்பட்ட இடுக்கண்ணுக்கு நிவாரணம் வழங்கி அவர்களைத் தக்க வைப்பதே இந்தப் படகுகள் அனுப்பப்பட்டதன் நோக்கமாகும். ஆனால் கடுப்பும், திமிரும் கொண்ட சிறிலங்காக் கடற்படை, தனது கடல் எல்லைக்குள் இந்திய உதவிப் படகுகளை நுழையவிடாது தடுத்து, விளக்கம் எதுவும் வழங்காது இந்தியாவுக்குத் திருப்பியனுப்பியது. யாழ். தீபகற்பத் தமிழ் மக்களுக்கு மனிதாபிமான உதவி புரிய முற்பட்ட வேளை சிறிலங்காவால் அவமானப்படுத்தப்பட்ட இந்தியா, தனது விமானப் படைப் போர் விமானங்களின் பாதுகாப்போடு, தளர்ந்து கிடந்த யாழ்ப்பாண மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்களை விமானப் பொட்டலங்களாக வானில் இருந்து சொரிந்தது. வெகுண்டெழுந்த சிங்கள அரசு தனது வான் எல்லையை இந்தியா அடாத்தாக மீறி விட்டதாகக் குற்றஞ் சாட்டியது. தனது இறைமையை இந்தியா அவமதித்து விட்டதாக சிறிலங்காவும், இனப் படுகொலையை சிறிலங்கா புரிவதாக இந்தியாவும் ஒருவரை ஒருவர் மாறிமாறிக் குற்றஞ்சாட்ட, இரண்டு அண்டை நாடுகளுக்கும் இடையே அரசியல் முறுகல் நிலை உரமேறியது. (தொடரும்)






## பெயர்ச்சியால் நன்மை அடையும் ராசிகள்:

**மேஷம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, கும்பம்**

இந்த ராசிக்காரர்கள் அனைவருக்கும் பாராட்டு, நினைத்த காரியங்கள் எளிதில் கைகூடல், நல்ல தொழில் என அனைத்து வகையிலும் முன்னேற்றம் காண்பர். இதுவரை இருந்த பிரச்சினைகள் நீங்கும். திருமண வயதில் உள்ளவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

## பெயர்ச்சியால் பரிகாரத்தின் மூலம் நன்மை அடையும் ராசிகள்:

**ரிஷபம், மிதுனம், கடகம், விருச்சிகம், மகரம், மீனம்**

இந்த ராசிக்காரர்கள் தெய்வ சந்நிதிகளுக்குச் சென்று வழிபட்டு வந்தால் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். நாள் பார்த்து வழிபட்டால் கோள்கள் கூட நற்பலன்களைத் தர வாய்ப்புள்ளது.



## கன்னி:

**நல்லவர்களை மதிப்புடன் நடத்தும் கன்னி ராசி அன்பர்களே!**

ராகு, கேது பெயர்ச்சியால் ராஜயோக வாழ்வு அமையும். ராசிக்கு 12ம் இடமான சிம்மத்தில்இருந்து 11ம் இடமான கடகத்துக்கு செல்வது சிறப்பு. பொருளாதாரம் பன்மடங்கு உயரும். பெண்களால் நன்மை கிடைக்கும். கேது 6ம் இடமான கும்பத்தில் இருந்து 5ம் இடமான மகரத்துக்கு வருவதால் அரசு வகையில் பிரச்சினையைச் சந்திக்க நேரிடலாம். சனி பகவான் ராசிக்கு3ல் இருப்பதால் தொழிலில் லாபம் அதிகரிக்கும். டிசெ.18ல் விருச்சிகத்தில் இருந்து 4ம் இடமான தனுசு ராசிக்கு மாறுகிறார். இதனால் குடும்பத்தில் பகை, பிரிவு ஏற்படுத்துவார்.

குரு பகவான் தற்போது ராசியில் இருப்பது சிறப்பு அல்ல என்றாலும் அவரது பார்வை பலத்தால் நன்மை உண்டாகும். ஒக.31க்குப் பின் 2ம் இடத்துக்கு செல்வதால் சுப பலன் அதிகரிக்கும். 2018 பெப். 13ல் 3ம் இடத்துக்கு மாறுவதால் நன்மை குறையும். கால வாரியாக விரிவான பலனை காணலாம். 2017 ஜூலை - டிசெம்பர் கையில் பணப்புழக்கம் இருக்கும். சமூகத்தில் மரியாதை உயரும். ஒக. 31க்கு பிறகு குருபகவானால் நற்பலன் அதிகரிக்கும். பெண்களால் வாழ்வு மேன்மை பெறும்.

புதிய முயற்சி அனைத்திலும் வெற்றி உண்டாகும். குடும்பத்தில் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போகவும். விருந்து, விழா என சென்று வருவீர்கள். வீட்டுக்கு தேவையான பொருள் குறைவின்றி கிடைக்கும். திட்டமிட்டபடி சுப நிகழ்ச்சி நடந்தேறும். புதுமணத் தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். புதிய வீடு கட்ட யோகம்உண்டு. அல்லது வசதியான வீட்டுக்கு குடிபுகுவீர்கள்.

தொழில், வியாபார வளர்ச்சியால் அமோக லாபம் கிடைக்கும். புதிய தொழில் அனுகூலத்தைக் கொடுக்கும். விரிவாக்கப் பணியிலும் ஈடுபட வாய்ப்புண்டு. பணியாளர்கள் கடந்த காலத்தை விட முன்னேற்றம் காண்பர். பணிச்சுமை இருந்தாலும் அதற்கான பலன்கிடைக்கும். கலைஞர்கள் சுமாரான நிலையில் இருப்பர். முயற்சிகளில் இருந்த தடை, மனதில் ஏற்பட்ட சோர்வு ஒக. 31க்கு பிறகு மறையும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பது அவசியம்.

குருவின் பார்வைப் பலத்தால் போட்டியில் வெற்றி பெற வாய்ப்புண்டு. விவசாயிகள் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கும். நிலப் பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு உண்டாகும். பெண்கள் கணவர் மற்றும் குடும்பத்தினரிடம் விட்டுக் கொடுத்து போவது நல்லது. பிள்ளைகள் வகையில் இருந்த பிரச்சினை மறையும். 2018 ஜனவரி - 2019 பெப்ரவரி ராகுவால் பணப்புழக்கத்துக்கு குறைவிருக்காது. சமூக மதிப்பு சிறப்பாக இருக்கும். ஆடம்பர வசதி பெருகும். கணவன் மனைவி இடையே அன்பு பெருகும். உறவினர்களால் உதவி உண்டு. தடைப்பட்ட திருமணம் நடந்தேறும். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்குவர். 2018 பெப். 13க்குபிறகு முயற்சியில் தடை குறுக்கிடும். குரு பகவான் 2018 ஏப். 9 முதல் 2018 செப். 3வரை வக்ரம் அடைந்து துலாம் ராசிக்கு மாறுவார். அவரால் நன்மை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கூட்டாளியிடையே ஒற்றுமை ஏற்படும். அரசு வகையில் உதவி கிடைப்பது அரிது. திருட்டு பயமும் ஏற்படலாம். பணியாளர்களுக்கு அதிகாரிகளின்ஆதரவு கிடைக்கும். சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கும். 2018 பெப். 13க்கு பிறகு விடாமுயற்சி தேவைப்படும். கலைஞர்களுக்கு எளிதில் புதிய ஒப்பந்தம் கிடைக்கும். அரசியல்வாதிகள் மேம்பாடு அடைவர்.

எதிர்பார்த்த பதவி கிடைக்கும். மக்களிடத்தில் செல்வாக்கும், பாராட்டும் கிடைக்கும். மாணவர்களுக்கு தேக்கநிலை மறையும். சிலருக்கு வெளிநாடு சென்று படிக்க வாய்ப்பு கிடைக்கும். விவசாயிகள் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அதிக விளைச்சல் காண்பர். புதிய சொத்து வாங்கலாம். வழக்கு, விவகாரத்தில் சாதகமான முடிவு கிடைக்கும். பெண்கள் கணவரின் அன்பும், ஆதரவும் பெற்று மகிழ்வர்.

**பரிகாரம்:** வெள்ளி ராகு காலத்தில் துர்க்கை வழிபாடு வியாழன்று குருபகவானுக்கு அர்ச்சனை பிரதோசத்தன்று நந்தீஸ்வரருக்கு நெய்தீபம்.



## துலாம்:

**பிறர் துயர் போக்க உதவும் துலாம் ராசி அன்பர்களே!**

ராசிக்கு 11-ம் இடமான சிம்மத்தில் உள்ள ராகு 10-ம் இடமான கடகத்திற்கு மாறுவதால் பொருள் இழப்பு, உடல் உபாதை ஏற்பட வாய்ப்புண்டு. விடாமுயற்சி இருந்தால் மட்டுமே எதிலும் வெற்றி காண முடியும். கேது 5-ம் இடமான கும்பத்தில் இருந்து 4ம் இடமான மகரத்துக்கு வருகிறார். அதனால் நட்பு விடயத்தில் எச்சரிக்கை தேவை. உடல் நலம் பாதிப்பு வரலாம். சனிபகவான் ராசிக்கு 2-ம் இடத்தில் இருப்பது சிறப்பானது அல்ல. ஏழரைச் சனியின் இறுதிக் கட்டமான இதில், சனியின் பார்வை பலத்தால் நன்மை காண்பீர்கள். டிசெ.18-ல் சனி 3-ம் இடமான தனுசுக்கு மாறிய பின், தொழில் வளர்ச்சியால் பணப்புழக்கம் அதிகரிக்கும். ராசிக்கு 12-ல் இருக்கும் குருவால் மனக்கவலை, வீண் அலைச்சல் ஏற்பட்டாலும், ஒக. 31-க்குப் பிறகு நிலைமை மாறும். இருந்தாலும் ஜென்ம குருவாக அவர் ராசிக்கு வருவதால் அதிக நன்மையை எதிர்பார்க்க முடியாது.

2018 பெப்.13ல் குரு 2ம் இடமான விருச்சிகத்துக்கு மாறுவது சிறப்பான அமைப்பாகும். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும். இனி விரிவான பலனைக் காண லாம். 2017 ஜூலை - டிசெம்பர் குடும்பத்தில் செலவு அதிகரிக்கும். சிக்கனம் பின்பற்றுவது அவசியம். கணவன் - மனைவி இடையே அன்பு மேலோங்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கு தடை குறுக்கிடலாம். சில காலம் பொறுத்திருப்பது நல்லது.

சற்று கவனம் தேவை. பணியாளர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். வீண் அலைச்சல் ஏற்பட வாய்ப்புண்டு. அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். கலைஞர்களுக்கு விடாமுயற்சியால் ஒப்பந்தம் கையெழுத்தாகும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி கிடைக்காமல் போகலாம். மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்து படிப்பது நல்லது.

விவசாயிகளுக்கு கரும்பு, எள், பயறுவகை மற்றும் பனை பொருள்களில் நல்ல விளைச்சல் கிடைக்கும். விடாமுயற்சி இருந்தால் புதிய சொத்து வாங்க முடியும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். கேதுவால் உடல்நலம் லேசாக பாதிக் கப்படலாம். 2018 ஜனவரி - 2019 பெப்ரவரி சனிபகவானால் புதிய முயற்சி வெற்றி பெறும். மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். முயற்சியில் இருந்த தடையனைத்தும் விலகும். பொருளாதார வளம் சிறக்கும்.

குருவின் பார்வையால் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நிறைவேறும். உறவினர்கள் வகையில் அனுகூலமான போக்கு காணப்படும். 2018 பெப். 13 - க்கு பிறகு திருமணம் பெண்களால் பொன், பொருள் சேரும். தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சிலர் தீயோர் சேர்க்கைக்கு ஆளாகி அவதியுறலாம். எனவே நட்பு விடயத்தில் எச்சரிக்கை தேவை. 2018 பெப். 13 - க்கு பிறகு பெண்களை பங்குதாரராக கொண்ட நிறுவனம் முன்னேற்றம் பெறும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். 2018 பெப்.13 க்கு பிறகு குருவின் பலத்தால் மேன்மை உண்டாகும்.

சக ஊழியர்கள் உதவிகரமாக செயற்படுவர். விண்ணப்பித்த கோரிக்கை நிறைவேறும். பதவி உயர்வு தானாக வந்து சேரும். விரும்பிய இட, பணி மாற்றம் பெறலாம். கலைஞர்கள் விடாமுயற்சியால் புதிய ஒப்பந்தம் பெறுவர். 2018 பெப்.13 -க்கு பிறகு அவப்பெயர், போட்டி முதலியன மறையும். எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்கும். அரசியல்வாதிகள் பலனை எதிர்பாராமல் உழைக்க வேண்டி இருக்கும்.

மாணவர்கள் அக்கறையுடன் படித்தால் மட்டுமே முன்னேற்றம் உண்டாகும். 2018 பெப்.13-க்கு பிறகு போட்டியில் வெற்றி காணலாம். விவசாயிகள் கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். ஆனால் அந்த உழைப்புக்கு ஏற்ற பலனை ஓரளவு பெறலாம். பெண்கள் பிள்ளைகளின் நலனுக்காக பாடுபடுவர். 2018 பெப்.13க்கு பிறகு சுபநிகழ்ச்சி கைகூடும்.

**பரிகாரம்:** ராகு, கேதுவுக்கு அர்ச்சனை செய்யுங்கள். வியாழனன்று தட்சிணாமூர்த்தி வழிபாடு, சுவாதியன்று லட்சுமி நரசிம்மருக்கு தீபம்.



## விருச்சிகம்:

**சுறுசுறுப்புடன் பணியாற்றும் விருச்சிக ராசி அன்பர்களே!**

ராசிக்கு 10-ம் இடமான சிம்மத்தில் இருக்கும் ராகு, 9-ம் இடமான கடகத்துக்கு மாறுவதால் பின் தங்கிய நிலை இனி இருக்காது. ஆனால் முயற்சியில் சில தடைகளைச் சந்திப்பீர்கள். 4-ம் வீடான கும்பத்தில் இருந்த கேது, ஜூலை 27ல் 3-ம் இடமான மகரத்துக்கு செல்வதால் நன்மை திகரிக்கும். தெய்வ அருளால் தொட்டது எல்லாம் துலங்கும். முயற்சியில் வெற்றி கிடைக்கும். ராசியில் இருக்கும் சனி பகவானால் தற்போது மனக் கவலை, உறவினர் தொல்லை, வெளியூர் வாசம் ஏற்பட்டிருக்கும். டிசெ. 18-ல் அவர் 2-ம் இடத்துக்கு மாறுவதால் குடும்பத்தில் பிரச்சினை உருவாக வாய்ப்புண்டு. 11ல் உள்ள குருபகவானால் பொருளாதார வளம் மேம்படும். செப்.1-ல் ராசிக்கு 12-ம் இடத்துக்கு மாறுவதால் பணவிரயம் ஏற்படலாம். 2018 பெப். 13க்குப் பிறகு ராசிக்கு மாறுவது சிறப்பானது அல்ல. அவரது பார்வை பலத்தால் நன்மை காணலாம்.

இனி கால வாரியாக விரிவான பலனைக் காணலாம். 2017 ஜூலை - டிசெம்பர் பொருளாதார வளம் மேம்படும். தடைகளை முறியடித்து செயலில் வெற்றி காண்பீர்கள். குருவால் நற்பலன் கிடைத்தாலும் ஏழரை சனிகாலம் என்பதால் விழிப்புடன் இருப்பது அவசியம். குடும்பத்தில் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து போவது நல்லது. புதிய வீடு வாங்க அல்லது வசதியான வீட்டிற்கு குடிபுக வாய்ப்புண்டு. திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேறும். தொழில், வியாபாரத்தில் கேதுவால் லாபம் அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்க வாய்ப்புண்டாகும். சனி வக்ர காலம் என்பதால் கூடுதல் நன்மை கிடைக்கும். (14 ஆம் பக்கம் பார்க்க...)

# நீதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு சிலையும் வைப்பார்களோ?



## வவுனியாவில் நடந்த கருத்தமர்வில் மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சிவகரன்

கடமை தவறிய நீதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு சிலை வைப்பார்கள் போல் இருக்கின்றது என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 'தமிழ் மக்களைப் பொறுப்பேற்பது யார்?' என்னும் தலைப்பில் இடம் பெற்ற கலந்தாய்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு மெய்ப்பாதுகாவலராக இருந்தவர் அந்த மெய்ப்பாது காவலரின் நிலைப்பாட்டுக்கு அப்பால் சென்று பஞ்சாயம் தீர்க்க போய் நடந்த ஒரு சம்ப வத்தை அவரை ஒரு தியாகி யாக்கி எம்மவர்கள் வீர வணக்கம் செலுத்துகின்றார் கள். நான் நினைக்கின்றேன்- சிலையும் வைத்து விடுவார்கள் போல் இருக்கின்றது.

பார்ப்பதற்கு அருவருப் பாக இருக்கின்றது. நாங்கள் இழக்க முடியாதவர்கள் எல்லோரையும் இழந்தவர்கள். இந்த விடுதலை யில் நாங்கள் எத்தனையோ தியாகங்களையெல்லாம் சந் தித்தவர்கள். இந்த விடுதலைக் காக பல்வேறு கால கட்டங் களில் போராடியவர்கள்.

அவர் தன்னுடைய கட மையை கூட சரியாகச் செய்ய வில்லை. கடமையைக் கூட சரியாக செய்யாத பொலிஸ்கார னுக்கு பதவி உயர்வு கொடுத் திருக்கின்றார்கள். அதாவது இராணுவ சட்டத்தின் பிரகாரம் தன்னுடைய துப்பாக்கியை எதிரி பறித்து அவனுடைய துப்பாக்கியால் எதிரி சுட்டவ னுக்கு பதவி உயர்வு கொடுத் திருக்கின்ற இலங்கை அர சு அதற்கு எம்மவர்கள் வீர வணக் கம், தியாகி, அறப்போர் நாய கன் என்றெல்லாம் சொல் கின்றார்கள்.

நீதிபதியை இலக்கு வைக்க வில்லை என்றும் சொல்லி விட்டார்கள். இப்பொழுது நீதி பதியும் முதலமைச்சர் ஆகப் போகின்றார். அவரையும் தியாகி என்றெல்லாம் சொல் கின்றார்கள். எனக்குத் தெரிய வில்லை- இந்த நீதி, நீதி பதிகளெல்லாம் இந்தப் பயங் கரவாத அரசமைப்புக்கு உட் படுத்தப்பட்டு தமிழ் மக்க ளுடைய போக்குகளுக்கு எவ் வாறான நிலைப்பாடு எடுத்தவர்கள்?.

அண்மையில் இந்த கண்ண தாசனுடைய தீர்ப்பு. எனக்குத் தெரியவில்லை. புனர்வாழ்வு அளிப்பது தண்டனையில் லையா? அல்லது அதற்கு பிற கும் தண்டனை வழங்குவதா? கண்ணதாசனுக்குஇப்பொழுது ஆயுள் தண்டனை கொடுக்கப் பட்டிருக்கின்றது.

அப்படியென்றால் முன் னாள் போராளிகள் எல்லோ ருக்கும் ஆயுள் தண்டனை கொடுக்க வேண்டுமா? அல் லது ஆதரவாக இருந்த எங்களை போன்றவர்களுக்கும் ஆயுள் தண்டனை தர வேண்டுமா? இது விளங்கவில்லை.

இந்த ஜனநாயகச் சூழல் எவ்வாறு போகின்றது?. ஜன நாயக சூழலை உருவாக்கு கின்ற நிலை எப்படி போகின் றது?. அல்லது இதற்கு ஒத்து ழைப்பு வழங்குகின்ற சம்பந் தன், சுமந்திரன் போன்றவர்கள் அதற்கு எவ்வாறு ஒத்தூதப் போகின்றார்கள்?. ஒன்றுமே புரியாத காலகட் டமாக இருக் கின்றது. அரசோடு ஒத்துழைப் பதற்கு தண்டனையில்லை. ஒத்துழைக்காதவர்களுக்கு தண்டனையா? என்ன நீதி? என்ன நியாயம்? கங்காரு நீதி மன்றம் போல் தான் இந்த நீதி செயற்பாடுகளும் போகின்ற னவா என்ற கேள்விகளும் எழுகின்றன.

ஆகவே, தமிழ் மக்களு டைய ஒழுக்க நெறி முறைகள் சார்ந்த அரசியல் கட்டமைப்புக் கள், போக்குகள் எல்லாம் திசை மாறிய நிலையிலே ஒரு வீர வணக்கம் போடுகின்ற நிலைப் பாடுகளோடு வந்து நிற்பது வெட்கக்கேடான காரியமாக இருக்கிறது. தமிழ் மக்களின் நியாயமான அரசியல் போக் குக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.- என அவர் மேலும் கருத்து தெரிவித்தார்.

# வெலிக்கடை சிறைச்சாலை பஸ் மீது இனந்தெரியாதோரால் தாக்குதல்!

## நீர்கொழும்பு பகுதியில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 31

நீர்கொழும்பு வாய்க்கால் பகுதியில் சிறைச்சாலை பஸ் மீது இனந்தெரியாதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன என சிலாபம் பொலி ஸார் தெரிவிக்கின்றனர்.

அந்தச் சிறைச்சாலை பஸ் அனுராதபுரத்திலிருந்து வெலிக் கடை சிறைச்சாலை நோக்கிப் பயணித்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

அனுராதபுரத்தில் நடை பெற்ற பூஜை வழிபாடுகளில் பங்கேற்பதற்காகச் சென்றி ருந்த சிறைக் கைதிகள் 14 பேர் அந்த பஸ்ஸில் பயணித் துள்ளனர்.

அந்தக் கைதிகள் வெலிக் கடை சிறைச்சாலை நடனக் குழுவைச் சேர்ந்தவர்கள் என் பது குறிப்பிடத்தக்கது. தாக்குத லில் எவருக்கும் பாதிப்பு ஏற் படவில்லை என்று தெரி விக்கப்படுகிறது.

மோட்டார்சைக்கிளில் சென் றவர்கள் நீர் போத்தல்களைக் கொண்டு பஸ் மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப் படுகிறது.

எனினும், யார் இந்தத் தாக் குதலை நடத்தினார்கள் என்பது பற்றிய விவரங்கள் ஏதும் வெளி யாகவில்லை எனத் தெரிவி க்கப்பட்டுள்ளது. (எ)

# அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை சீன நிறுவனத்துக்கே அதிக அதிகாரங்கள்!

## குற்றம் சுமத்துகிறார் ஜயந்த சமரவீர



கொழும்பு, ஜூலை 31

அம்பாந்தோட்டை துறை முக உடன்படிக்கை தொடர் பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தில் அதன் உரிமை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு உள்ளதாகக் குறிப்பிடப்பட்ட போதும், கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் அதிகமான அதிகாரங்கள் சீன நிறுவனத் துக்கே காணப்படுகின்றன என்று குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

தேசிய சுதந்திர முன்னணி யின் பிரதித் தலைவர் ஜயந்த சமரவீர இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இதனால் நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்ட துறைமுக உடன்படிக்கை சட்டபூர்வமானது அல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அம்பாந் தோட்டை துறைமுகம் இலங் கையின் பொருளாதாரத்தில் பெரிய எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் மேற் கொள் ளப்பட்ட உடன் படிக்கை யின் மூலம் அந்தத் தாக்கத்தில் இருந்து மீள்வதற்கான சந் தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என அரசு தரப்பு அரசியல் தலை வர்கள் கருத்துத் தெரிவித் துள்ளனர்.

# 'தமிழ் மக்களைப் பொறுப்பேற்பது யார்'..?

## வவுனியாவில் கருத்தரங்கம்



கொழும்பு, ஜூலை 31

'தமிழ் மக்களை பொறுப்பேற்பது யார்' என்ற தலைப்பில் வவுனியா சமூக ஆர்வலர்கள் ால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கம் வவுனியா வாடி வீட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அரசியல்வாதிகள் சார்பில் வன்னி நாடாளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை உறுப்பினர்களான ஜி. ரி.லிங்கநாதன், எம். தியாகராஜா ஆகியோரும் அரசியல் ஆய்வாளர்கள் நிலாந்தன், சி.அ.யோதிலிங்கம் ஆகியோரும் மன்னார் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டாளர் எஸ். சிவகரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் தமிழரசுக் கட்சிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் முன் வைக்கப்பட்டிருந்தன. (எ-100)

# வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யத் தேவையில்லை

## அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் கூறுகிறது

கொழும்பு, ஜூலை 31

தற்போதைய சூழலில் வெளி நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லை என்று மரதக ஹமுல அரிசி ஆலை உரிமையா ளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரிசியின் அளவு மற்றும் தேவை குறித்து சரியான தக வல்கள் இல்லாத காரணத்தால் சிக்கலான நிலை தோன்றியுள் ளதாக சங்கத்தின் தலைவர் பி.கே.ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இலங்கை யில் தற்போதைய அரிசி கையிருப்பைகருத்தில்கொண்டு, நான்கு நாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய திட்ட மிட்டுள்ளதாக தொழிற் துறை மற்றும் வர்த்தக அபிவி ருத்தி அமைச்சு தெரிவித்துள் ளது.

இந்த அரிசி தொகை சதோச வின் ஊடாக இறக்குமதி செய் யப்படுவதாக தெரிவிக்கப்படு கின்றது. (எ)

# 26 வருடங்களாக...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனெனில், தடா கோர்ட் வழக்கு விசாரணையின் முடிவில், குற்றம் சாட்டப்பட் டிருந்த 26 பேருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றம் செய்யுமாறு தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த போதுதான், 4 பேருக்குத் தூக்குத் தண்டனை 3 பேருக்கு ஆயுள் தண்டனை, மற்றவர்களுக்கு விடுதலை எனத் தீர்ப்பு கிடைக்கப்பெற்றது.

இதுமட்டுமல்ல... 'வாக்குமூலத்தில், அவர்கள் சொன்னதை நான் எழுத வில்லை.... வேண்டு மென்றே தவறு செய்துவிட்டேன். தப்புதான்' என்று இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான ரகோத்தமன் இப்போது சொல்கிறார்.

அதேபோல், உச்ச நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரித்து தண்டனையை உறுதிசெய்த நீதிபதி கே.டி.தோமஸும்கூட பணி ஓய்வு பெற்ற பிறகு, தவறு செய்துவிட்டோம்.

இந்தியாவில் பிரதமராக இருந்தவர், படுகொலை செய்யப்பட்ட வழக்கில், யாருக்கும் தண்டனை கொடுக்கப்படாமல் இருந்தால், அது தவறாக நினைக்கப்படும் என்ற எண்ணத்தில் அப்படியொரு தீர்ப்பை அளித்துவிட்டோம்' என்று இப்போது வருத்தப்படுகிறார்.

'தவறு செய்துவிட்டோம்' என்று இவர்கள் காலம்கடந்து வருத்தப்படுவதால், யாருக்கு என்ன லாபம்? குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஏழு பேரும் 26 ஆண்டுகளாகச் சிறைக்குள் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நிற்கிறார்கள். இவர்களுடைய பெற்றோர் ஒரு கால் சுடுகாட்டிலும் ஒரு கால் வீட்டிலுமாக 'மகன் வருவான்' என்ற நம்பிக் கையுடன் இறுதிமூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு கிடக்கிறார்கள்.

இன்றையச் சூழ்நிலையில், இவர்களை விடுவிக்கும் அதிகாரம் என்பது மத்திய - மாநில அரசுகளின் கைகளில்தான் இருக்கின்றன... அரசியல் பேசாமல், மனிதாபிமானத்தோடு செயல் படும் ஓர் அரசியல் தலைவர் இங்கே இருந்தால், நிச்சயம் நீதி கிடைக்கும்!'' -என நம்பிக்கை வார்த்தைகளில் பேசி முடிக்கிறார் பழ.நெடுமாறன்.

## ராகு- கேது பெயர்ச்சிப் பலன்கள்

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் அரசு வகையில் விழிப்புடன் இருப்பது அவசியம்.பணியாளர்களுக்கு வழக்கமான சம்பள உயர்வு கிடைக்கும். ஏதோ காரணத்தால் வேலையை இழந்தவர்கள் மீண்டும் வேலை கிடைக்கப் பெறுவர். ஒக.31-க்கு பிறகு வேலைப்பளு இருக்கும். அதிகாரிகளிடம் அனுசரித்து போகவும். கலைஞர்களுக்கு வருமானம் சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். அரசியல் வாதிகள் சிறப்பான வளர்ச்சி காண்பர். பணப்புழக்கத்துக்கு குறை இருக்காது. மாணவர்கள்

முன்னேற்றம் காணலாம். குரு பகவானின் பார்வை யால் வெளிநாடு சென்று படிக்க வாய்ப்புண்டு. விவசாயிகள் மொச்சை, கடலை, கேழ்வரகு, நெல், கோதுமை போன்ற தானியம் மூலம் நல்ல விளைச்சல் பெறுவர். புதிய சொத்து வாங்க வாய்ப்புண்டு. பெண்களுக்கு தடைபட்ட திருமணம் இனிதே நடந்தேறும்.


உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். 2018 ஜனவரி-2019 பெப்ரவரி கேதுவால் பொன் பொருள் சேரும். உடல்நலம் மேம்படும். இறையருளால் வாழ்வில் மகிழ்ச்சி நிலைக்கும். 2018 பெப். 13- க்கு பிறகு குருவின் பார்வை பலத்தால் புதிய வீடு - மனை வாங்க யோகம் கூடி வரும்.

தொழில் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். பணியாளர்கள் உயர்ந்த நிலை அடைவர். தனியார் துறையில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு இருந்தாலும் வருமானம் குறையாது. அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். 2018 பெப்.13 - க்கு பிறகு விண்ணப்பித்த கடனுதவி, கோரிக்கை கிடைக்கும். கலைஞர்கள் பலன் கருதாமல் உழைக்க வேண்டி இருக்கும். விடாமுயற்சியால் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். அரசியல்வாதிகள் நற்பெயர் கிடைக்கப் பெறுவர். கடந்த காலத்தில் இருந்த தடை அனைத்தும் விலகும்.

மாணவர்கள் சிரத்தையுடன் படிப்பது நல்லது. ஆசிரியர்களின் அறிவுரையை ஏற்பது அவசியம். விவசாயிகள் சிறப்பான பலன் காண்பர். நெல், கோதுமை, பழவகைகள், கடலை போன்ற பயிர்களில் அதிக வரு மானம் கிடைக்கும். வழக்கு விவகாரத்தில் சாதகமான முடிவு கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளால் பெருமை பெறுவர். குடும்பத்தோடு அடிக்கடி புனித தலங்களுக்குச் செல்வர்.

**பரிகாரம்:** சனியன்று அனுமனுக்கு நெய்தீபம் பௌர்ணமியன்று கிரிவலம் வருதல் செவ்வாயன்று முருகன் வழிபாடு.

# ஜி.எஸ்.ரி. நாட்டின் பொருளாதாரத்தை மாற்றிவிட்டது மான் கீ பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பெருமிதம்



பிரதமர் நரேந்திர மோடி ஒவ் வொரு மாதமும் கடைசி ஞாயிற் றுக்கிழமைஇந்தியமக்களிடையே மான் கீ பாத் என்னும் நிகழ்ச்சி மூலம் உரையாற்றி வருகிறார். இந்த வகையில், 34ஆவது மான் கீ பாத் நிகழ்ச்சியில் நேற்று மோடி பேசியவை வருமாறு:-

ஜி.எஸ்.ரியை அமுல்படுத்தி ஒரு மாத காலம் ஆகியுள்ள நிலை யில் மக்களிடையே ஜி.எஸ். டி.க்கு நல்ல வரவேற்பு கிடைத் துள்ளது. ஜி.எஸ்.ரி. நாட்டின் பொருளாதாரத்தை மாற்றிவிட் டது. அனைத்து முடிவுகளும் மத்திய மற்றும் மாநில அரசுகள் கூட்டாகவே எடுத்தன.

இது ஒத்துழைப்பு கூட்டாட் சிக்கு ஒரு நல்ல உதாரணம். வெற்றிகரமாக ஜி.எஸ்.ரியை அமுல்படுத்திய தன் மூலம் மற்ற நாடுகளுக்கு இந்தியா ஒரு முன்னுதாரணமாக விளங்கும். ஜி.எஸ்.ரியின் மூலம் அரசுக்கும் வியாபாரிகளுக்கும் இடையே நல்ல நட்பு ரீதியான சூழல் ஏற்பட்டுள்ளது.

வெள்ளையரை வெளியேற்றும் போராட்டத்தில் மகாத்மா காந்தி யின்தலைமைத்துவம், அனைவர் நினைவிலும் இருக்கிறது. அந்த போராட்டத்தில் பங்குபெற்ற லோக் நாயக், லோஹியா போன்ற தலைவர்கள் நம் நினைவில் இருக்கின்றார்கள். வெள்ளையரை வெளியேற்றும் போராட்ட முழக் கத்தை டாக்டர் யூசப் மெஹர் அலி தான் உருவாக்கினார் என் பது நம்மில் சிலருக்குத் தான் தெரியும்.

இப்பொழுது நாம் நாட்டுக்காக உயிரை விட வேண்டியது இல்லை. நாட்டை வளர்ச்சியின் புதிய உச்சத்திற்குஎடுத்துச்செல்ல நாட்டிற்காக நாம் வாழவேண்டும்.

எனது சுதந்திர தின உரை மிக வும் நீளமாக இருப்பதாக என்னி டம் சிலர் கூறினார்கள், எனவே இந்த ஆண்டு 40-50 நிமிடங் களில் உரையை நிறைவுசெய்ய நினைக்கிறேன். வெள்ள பாதிப்பு கள் குறித்து அனைத்து நேரங்க ளிலும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய தகவல் தொடர்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

நாம் ஒரு உறுதிமொழி எடுக்க வேண்டும். சுத்தமின்மையை இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டும், வறுமையை இந்தி யாவை விட்டு வெளியேற்ற வேண்டும், பயங்கரவாதத்தை இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டும், சாதியை இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டும், மதவாதத்தை இந்தியாவை விட்டு வெளியேற்ற வேண்டும். என்று தெரிவித்துள்ளார்

# மிதாலிக்கு ஒரு கோடி ரூபா பரிசு; தெலுங்கானா முதல்வர் அறிவிப்பு

இந்தியப் பெண்கள் கிரிக்கெட் அணித் தலைவர் மிதாலி ராஜ், தனது தந்தை துரைராஜ், தாயார் லீலாராஜ், பயிற்சியாளர் மூர்த்தி ஆகியோருடன் தெலுங்கானா முதல்வர் கே. சந்திரசேகர ராவை சந்தித்தனர். அப்போது மிதாலி ராஜுக்கு பொன்னாடை போர்த்தி, பூங்கொத்து கொடுத்து முதல்வர் பாராட்டினார்.

அப்போது வாழ்த்துத் தெரிவித்த முதல்வர் கூறியபோது, கிண் ணத்தை வெல்லாவிடினும், இறுதி வரை போராடி இந்தியா வுக்குப் பெருமை சேர்த் ததுடன், இந்த போட்டிகளில் அதிக ஓட் டங்களைக் குவித்து நாட்டுக்கே மிதாலி பெருமை சேர்த்துள்ளார். இதனால் ஹைதராபாத்துக்கும், தெலுங்கானாவுக்கும் அவர் பெருமை தேடித் தந்துள்ளார். அவர் மேன்மேலும் பல சாத னைகளைப் புரிய வேண்டும்.



மிதாலி ராஜுக்கு1 கோடி ரூபா பரிசு தொகையும், ஹைதராபாத் ஜூப்ளி ஹில்ஸ் பகுதியில் வீட்டு மனை வசதியும் வழங்கப் படும். மிதாலியின் பயிற்சியாளர் மூர்த் திக்கு 25 லட்சம் ரூபா பரிசு வழங்கப்படும் என்றும் முதல்வர் அறிவித்துள்ளார்.

## காஷ்மீரில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை


காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத் தில் உள்ள தாகாப் பகு தியில் உள்ள வீடு ஒன்றில் 2 பயங்கரவா திகள் பதுங்கியுள்ள னர் எனப் பாதுகாப்பு படையினருக்குத் தக வல் கிடைத்தது.

தொடர்ந்து, இராணு வத்தினரும், பொலி ஸாரும்அந்தவீட்டைச் சுற்றி வளைத்தனர். இதனைப் பார்த்த பயங்கரவாதிகள் துப் பாக்கிச் சூடு நடத்தி னர். பாதுகாப்புப் படையினரும் பதி லடி கொடுத்தனர்.

இதில் 2 பயங்கர வாதிகள் சுட்டுக்கொல் லப்பட்டனர்.தொடர்ந்து அங்கு தேடுதல் வேட்டை நடந்து வரு கிறது.

# அசாம், குஜராத்தில் வெள்ளம் பாதித்த பொதுமக்களுக்கு உதவி செய்யுங்கள்!

## ரசிகர்களுக்கு நடிகர் அமீர்கான் வேண்டுகோள்





அசாம் மற்றும் குஜராத் மாநிலங் களில் கனமழை காரணமாக வெள் ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால், பொதுமக்கள் உடை மைகளை இழந்து ஆதரவற்ற நிலைக்கு ஆளாகியிருக்கின்ற னர்.

மேலும், அசாம் மாநிலத்தில் 79 பேரும், குஜராத்தில் 72 பேரும் வெள்ளத்தில் சிக்கி பலியாகி இருக்கின்றனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில் அசாம், குஜ ராத்தில் வெள்ளம் பாதித்த மக்க ளுக்கு உதவுமாறு ரசிகர்களுக்கும், பொதுமக்களுக்கும் நடிகர் அமீர் கான் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர் பாக சமூக வலைத் தளத் தில் கூறியவை வருமாறு:-

குஜராத் மற்றும் அசாம் மாநிலங்களின் சில பகுதி கள் வெள்ளத்தால் பயங் கரமாகப் பாதிக்கப்பட்டு இருக் கின்றன. மக்கள் இக்கட்டான நிலையை சந்தித்து வருகிறார்கள். ஏராளமானோர் தங்கள் உயிரை இழந்து விட்டனர். இயற்கைக்கு முன்பாக நாம் அனைவரும் ஆதர வற்றவர்களாக இருக்கலாம்.

ஆனால், நமது சகோதர, சகோ தரிகளுக்கு நம்மால் இயன்றதை நிச்சயம் செய்ய முடியும். நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து குஜராத், அசா மில் வெள்ளத் தால் பாதிக்கப் பட்டவர்க ளுக்கு உதவி செய்வோம். இரு மாநில முதலமைச்சர் நிவாரண நிதிக்கு நம்மால் இயன்ற பங்களிப்பை அளிப்போம் என்று தெரிவித் துள்ளார்.

# ஒட்டுமொத்த அமெரிக்க நாடும் எங்களது தாக்குதல் இலக்குக்குள்!



## கொக்கரிக்கிறார் வடகொரிய ஜனாதிபதி

வொஷிங்டன், ஜூலை 31

கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கவல்ல இரண்டாவது ஏவுகணைச் சோதனை முக்கிய அமெரிக்க நகரங்களையும் தாக்கும் திறன் கொண்டது. இந்தச் சோதனை மூலம் ஒட்டுமொத்த அமெரிக்காவும் எங்கள் தாக்குதல் இலக்குக்குள் வந்துவிட்டது.

-இவ்வாறு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியா கடந்த வெள்ளிக்கிழமை ஜப்பான் நாட்டின் கடல் எல்லையில் புதிய ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இது தொடர்பில் உள்ளூர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

இந்த ஏவுகணை 3 ஆயிரத்து 725 மீற்றர் உயரத்தில் பறந்து சுமார் 998 கிலோமீற்றர் தூரம் செல்லக்கூடியவாறு அமைந்திருக்கின்றமை திருப்தி அளிக்கிறது.

மேலும், எந்த நேரத்திலும் எந்த ஓர் இடத்தையும் தாக்க வல்ல ஏவுகணையாக இது அமைந்திருக்கின்றது. அர்த்தமற்ற கூச்சல் போடும் அமெரிக்காவுக்கு இது ஓர் எச்சரிக்கை ஆகும். -என்றார்.


இதேவேளை, வடகொரியாவின் இந்த நடவடிக்கைக்கு ஐ.நா. பொது செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். வடகொரியாவின் இந்த செயல் கொரியா கடல் பகுதியில் மேலும் பரபரப்பான சூழலுக்கு வழிவகுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடகொரியாவின் கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கக்கூடிய முதல் ஏவுகணை அலாஸ்கா வரை செல்லக் கூடியது என்றும், இரண்டாவது ஏவுகணை கூடுதல் தூரம் சென்று பல நகரங்களை இலக்காக்கவல்லது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பௌதிக விஞ்ஞானி டேவிட் ரைட் இது பற்றிக் கூறுகையில்-

''ஏவுகணை பற்றிய வடகொரியாவின் கணக்கு சரியெனில், அது லொஸ் ஏஞ்சலஸ், டென்வர், சிகாகோ உள்ளிட்ட நகரங்கள்வரை தாக்கக் கூடிய திறன் கொண்டது .''-என்றார். (ச)

## விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் புகைப்படம் ஏலம்!



*அறிவியல் விஞ்ஞானி அல்பர்ட் ஐன்ஸ்டீன் தன்னுடைய நாக்கை நீட்டிக் கிண்டலாகப் 'போஸ்' கொடுக்கும் புகழ் பெற்ற புகைப்படம் 80 லட்சம் ரூபாவுக்குஏலம்போயுள்ளது.*

*லொஸ்ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த ஒரு நபரால் இந்தச்சிறப்பு மிக்க புகைப்படம் ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.*

*அல்பர்ட் ஐன்ஸ்டீன் 1951 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி இரவு, நண்பர்களு டன் தன்னுடைய 72 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார்.*

*இந்தப் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் முடிவடைந்த நிலையில், நண்பர்களுடன் ஐன்ஸ்டீன் காரில் புறப்பட்டார். அப்போது அங்கிருந்த ஆர்ட் சஸ்ஸீ எனும் புகைப்படக் கலைஞர் ஐன்ஸ்டீனை நோக்கி, 'இறுதியாக ஒரே ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்கிறேன் சிரித்த மாதிரி 'போஸ்' கொடுங்கள்' எனக் கேட்டுள்ளார். மிகவும் சோர்வாக இருந்த ஐன்ஸ்டீன், அவரைக் கிண்டல் செய்யும் வகையில் நாக்கை வெளியே நீட்டியவாறு போஸ்' கொடுக்க அதை அப்படியே புகைப்படமாகப் பதிவு செய்தார் ஆர்ட் சஸ்ஸீ. (ச)*

## கொரிய தீபகற்பத்துக்கு மேலாகப் பறந்தன அமெ. விமானங்கள்!



அமெரிக்காவுக்குச் சொந்தமான இரண்டு பி - 1 பி ரக குண்டு வீச்சு விமானங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொரிய தீபகற்பத்துக்கு மேலாகப் பறந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் அமெரிக்க விமானப் படையினரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அணுவாயுத சோதனை நடவடிக்கைகளால் உலகையே அச்சுறுத்தி வரும் வடகொரியாவுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை காட்டும் வகையிலேயே மேற்படி குண்டு வீச்சு விமானங்கள் பறந்தன என அமெரிக்க விமானப் படையினர்தெரிவித்துள்ளனர். (ச)

## பாகிஸ்தானின் இடைக்காலப் பிரதமராக எரிவாயுத்துறை அமைச்சர் ஷாகித் தெரிவு!



இஸ்லாமாபாத், ஜூலை 31

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ராஜினாமா செய்ததையை அடுத்து, பாகிஸ்தானின் இடைக்காலப் பிரதமராக இயற்கைஎரிவாயுத்துறை அமைச்சராக உள்ள ஷாகித் கஹான் அப்பாஸி நியமிக்கப்பட்டார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தி வெளிநாடுகளில் சொத்துகளைக் குவித்தார் என அவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்த நிலையில், அவரைப் பதவி நீக்கம் செய்து உச்சநீதிமன்றம் அறிவித்தது. இதனை அடுத்து, அவர் தனது பதவியை ராஜி னாமா செய்தார்.

இதை அடுத்து, புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க நவாஸ் ஷெரீப் தலைமையில் ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் கட்சியின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் புதிய பிரதமராக நவாஸின் இளைய சகோதரர் ஷபாஸ் ஷெரீப் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால், அவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே பிரதமராக பதவியேற்க முடியும் என்பதால், இடைக்காலப் பிரதமராக அமைச்சர் ஷாகித் அப்பாஸி தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் 45 நாள்கள் இடைக்காலப் பிரதமராகப் பதவி வகிப்பார் என்று பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி அறிவித்துள்ளது.

## இரவு விடுதியில் வேட்டு: ஜேர்மனில் 2 பேர் சாவு!

*ஜேர்மன் நாட்டில் உள்ள இரவு விடுதியில் மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கி சூட்டில் அப்பாவி மக்கள் இருவர் கொல்லப்பட்டனர்.*

*ஜேர்மன் நாட்டின் தெற்கு பகுதியில் அமைந்துள்ளது கான்ஸ்டன்ஸ் நகரம். இங்குள்ள இரவு விடுதியில் நேற்று ஞாயிற் றுக்கிழமை காலை இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அப்போது சுமார் 34 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் இரவு விடுதியில் நுழைந்து அங்கிருந்தவர்களை நோக்கித் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.*

## எரியக்கூடிய பனியில் இருந்து இயற்கை எரிவாயு உற்பத்தி!

ஷாங்காய், ஜூலை 31

தென் சீனக் கடல் பகுதியில் எரியக் கூடிய பனி என்று அழைக்கப்படும் (Methane hydrate) மீதேன் ஹைட்ரேட்டில் இருந்து இயற்கை எரிவாயுவை சீனா சோதனை ரீதியில் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது என அந்த நாட்டு நிலம் மற்றும் வளத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தென் சீனக்கடல் பகுதி எண்ணெய், இயற்கை எரிவாயு வளமிக்க பகுதி ஆகும். இங்கு சீனா தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது. மேலும், செயற்கைத் தீவுகளை அமைத்து இராணுவ மயமாக்கி வருகிறது. ஆனால், தென் சீனக்கடல் பகுதியில் தங்களுக்கும் பங்கு இருக்கிறது எனக்கூறி பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, புருணை, தாய்வான் ஆகிய நாடுகள் உரிமை கொண்டாடி வருகின்றன.

இந்த நிலையில், சர்ச்சைக்குரிய தென் சீனக்கடல் பகுதியில் இயற்கை எரிவாயுவை சோதனை ரீதியில் உற்பத்தி செய்து சீனா சாதனை படைத்துள்ளது.



தென் சீனக்கடலில் சாதனை

தென்கிழக்கு சீன நகரான சுகாய் கடற்கரையில் 60 நாள்கள் நிறுவப்பட்டிருந்த துளையிடும் அமைப்பு, 3 லட்சத்து 9 ஆயிரம் கன மீற்றர் இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்துள்ளது.

சீனா கடந்த 20 ஆண்டுகள் முடிவற்ற முயற்சிகள் செய்ததன் விளைவாக கோட்பாடு, தொழில் நுட்பம், பொறியியல் போன்றவற்றில் வரலாற்று முன்னேற் றத்தை அடைந்துள்ளன என்று வளத்துறை அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு: 4 பேர் உயிரிழப்பு; 5 பேர் காயம்!

இஸ்லாமாபாத், ஜூலை 31

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத்தின் செட்கி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 4 பேர் உயிரிழந்தனர்; 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு இது வரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால், இந்தப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான் தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கக் கூடும் என அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

# காலி முதலாவது டெஸ்ட் போட்டி: மனம் திறக்கும் அணித் தலைவர்கள்






இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அடைந்த படுதோல்விக்கான காரணத்தை இலங்கை அணித்தலைவர் ரங்கன ஹேரத் வெளியிட்டுள்ளார்.

காலி மைதானத்தில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 304 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தி அபார வெற்றிப்பெற்றது.

முதல் டெஸ்ட் போட்டியில் தனது அணியின் அணைத்து துறையிலும் மிக மோசமாக விளையாடியதாக ஒப்புக்கொண்ட இலங்கை அணித் தலைவர் ஹேரத்,



தவான் விக்கெட்டைத் தவற விட்டதே இலங்கை அணிக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது.

இதுவே போட்டி இலங்கையிடம் இருந்து நழுவ முக்கிய காரணம். மேலும், இலங்கை நட்சத்திர வீரர் குணரத்ன இல்லாதது அணிக்கு பெரும் இழப்பாக அமைந்தது - என்றார்.

இலங்கை அணி களத்தடுப்பு, பந்துவீச்சு, துடுப்பாட்டம் என்று அனைத்துதுறைகளிலும் இந்தியாவுக்கு எதிராக மோசமாக ஆடியது. நான்கு நாள்களுடன் முடிவடைந்த இந்த டெஸ்ட் போட்டியை அடுத்து இலங்கை அணி போட்டிகளை வென்று தரும் அசேல குணரத்னவை இழந்திருப்பதோடு தனது முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக அடுத்த போட்டியில் விளையாடுவது சந்தேகமாக உள்ளது. அதேபோன்று அண்மையில் நியமிக்கப்பட்ட டெஸ்ட் அணித் தலைவர் தினேஷ் சந்திமால் தனது நிமோனியா காய்ச்சலில் இருந்து இன்னும் மீண்டு வரவில்லை. இரு அணிகளுக்கும்இடையிலான அடுத்த டெஸ்ட் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

எனது கைவிரலை நேற்று எக்ஸ்ரே (X-ray) எடுத்து பார்த்தபோது எந்த ஒரு முறிவையும் காட்டவில்லை. இதே இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன்முறிவுஏற்பட்டதே அங்கு சற்று வீக்கமும் வேதனையும் இருப்பதற்கு காரணம். அடுத்த சில தினங்களில் சுகம் பெற்றுவிடுவேன் என்று நம்புகிறேன். சந்திமால் பற்றி இதுவரை எந்த உறுதியான செய்தியும் கிடைக்கவில்லை. அவர் அடுத்த போட்டியில் விளையாடுவார் என்று நான் எதிர்பார்க்கிறேன் என்று ஹேரத் தெரிவித்துள்ளார்.

மெல்பேர்ன் நகருக்குச் செல்லத் திட்டமிட்டிருந்த தவான் முரளி விஜயிற்கு பதில் அணியில்இடம்பிடித்து அதிரடியாக 168 பந்துகளில் 190 ஓட்டங் களை விளாசி ஆட்ட நாயகன் விருதை வென்றார். அப்போதைய நிலையில் அவர் தொடர்பில் எமக்கு சில திட்டங்கள் இருந்தபோதும் நாம் அதனைச் செயற்படுத்துவதில் தோல்வி கண்டோம். உதாரணத்திற்கு கூறுவதென்றால் நாம் அவருக்கு அதிக அளவு இடைவெளி கொடுத்தோம். போட்டியின் முதல் பகுதியில் ஆட்டம் எம்மை விட்டு கைநழுவ ஆரம்பித்தது.

304 ஓட்ட இடைவெளியில் போட்டியை வென்றதானது இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் பெற்ற மிகப்பெரிய டெஸ்ட் வெற்றியாகும்.

இலங்கை அணியின் மந்தமான பந்துவீச்சில் எதிரணியின் மூன்று துடுப்பாட்ட வீரர்கள் சதம் பெற்று அணியை வலுவான நிலைக்கு கொண்டு சென்ற நிலையில் இலங்கை அணியின் பந்துவீச்சாளர்களுக்கு உதவாத ஆடுகளத்தில் இந்திய வீரர்கள் களத்தடுப்பில் சிறப்பாக செயற்பட்டதோடு அவர்களது வேகப்பந்து வீச்சாளர்கள் ஆரம்பத்திலேயே விக்கெட்டுகளை சாய்த்தனர். சுழற்பந்து வீச்சாளர்களும் ஆடுகளத்தைச் சிறப்பாக பயன்படுத்தினர்.


எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய அணி வலுவான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருக்கும்நிலையில்இலங்கை அணி அந்த சவாலுக்கு முகம் கொடுக்கத் தயாரான நிலையிலேயே அடுத்த டெஸ்ட்டுக்கு செல்ல வேண்டியுள்ளது. ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி இலங்கை அணி கடுமையான போராடத் தயாரான நிலையிலேயே களமிறங்க வேண்டிய நிலைக்கு முகம்கொடுத்துள்ளது.

நாம் இதனை விடவும் நிச்சயமாக சிறந்ததொரு அணி. எமக்கு எதிராக அணி ஒன்று மிக நீண்ட காலத்திற்கு பின்னரே 600 ஓட்டங்களைப் பெற்றதாகநான்நினைக்கிறேன். மற்றொரு விடயம், பல இந்திய துடுப்பாட்ட வீரர்கள் சதங்களை பெற்றபோதும், எமது பெரும்பாலான துடுப்பாட்ட வீரர்கள் மூன்று இலக்க ஓட்டத்தை நெருங்கிய நிலையிலேயே ஆட்டமிழந்தார்கள். இதுவும் போட்டியின் மிகப்பெரிய வித்தியாசங்களில் ஒன்று என்று ஹேரத் தெரிவித்துள்ளார்.

எஞ்சிய இரண்டு போட்டிகளில் வெல்ல வேண்டுமெனில், எப்படியாவது முன்னேற புதிய வழிகளை கண்டு பிடித்து சிறப்பாக செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

### விராட் ஹோக்லி

இன்னும் சில பகுதிகளில் நாம் அதிக அவதானம் செலுத்தி அவை களை மேம்படுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக நான்கு, ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கும் வேளையில் இன்னிங்ஸின் கடைசி பகுதியில் பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள்ஓட்டங்கள் பெறுவதை அனுமதிக்கக் கூடாது. ஆனால், எல்லாவற்றுக்கும் மேலே, நாம் பெப்ரவரி மாதத்திலேயே கடைசியாக டெஸ்ட் போட்டியில் விளையாடினோம். அது தொடக்கம் அதிகமாக ஒருநாள் போட்டிகளிலேயே விளையாடினோம். இதற்கு இடையில் எம்மை தயார்படுத்த போதிய அவகாசம் கிடைக்கவில்லை. அந்த கோணத்தில் பார்த்தோம் என்றால் நாம் பள்ளத்தில் இருந்து மீண்டும் எழுந்து டெஸ்ட் போட்டி ஒன்றில் வெற்றி பெற்றிருப்பது சிறப்பானதாகும். அந்தக் கோணத்தில் பார்த்தால் நாம் நன்றாக ஆடியிருக்கிறோம் என்று தனது 17ஆவது டெஸ்ட் சதத்தைப் பெற்ற இந்திய அணித் தலைவர் விராட் ஹோக்லி போட்டிக்கு பின் தெரிவித்துள்ளார்.




பிரதிகூலங்களுக்கு அப்பால் இலங்கை அணி சில அனுகூலங்களுடனேயே காலி டெஸ்டில் இருந்து முன்னேற எதிர்பார்த்துள்ளது. டில்ருவன் பெரேரா இரண்டு இன்னிங்ஸிகளிலும் தன்னை ஒரு துடுப்பாட்ட வீரராக நிலைநிறுத்திக் கொண்டுள்ளார். குறிப்பாக முதல் இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 92 ஓட்டங்களைப் பெற்றார். அதேபோன்று திமுத் கருணா ரத்ன கடைசி இன்னிங்ஸில் போராடி 92 ஓட்டங்களைப் பெற்றார். ஆனால் நுவன் பிரதீப் முதல் இன்னிங்ஸில் 132 ஓட்டங்களுக்கு 6 விக் கெட்டுகளை வீழ்த்திய அபாரமான பந்துவீச்சு இலங்கை அணிக்கு சாதகமாக அமைந்துள்ளது.

திமுத் கருணாரத்ன சிறந்த ஒரு வீரர் என்பது எம் அனைவருக்கும் தெரியும். இதற்கு முன்னரும் இந்தத் தரத்தில் அவர்தன்னை நிரூபித்துள்ளார். இந்த வகை கிரிக்கெட்டில் அவருக்கு நல்ல அனுபவம் கிடைத்துள்ளது. இலங்கையின் ஒரு முன்வரிசை வீரராக அவர் உறுதியாக உள்ளார். அதே போன்று, நுவன் பிரதீப் முதல் இன்னிங்ஸில் நன்றாக பந்து வீசினார் என்று நான் நினைக்கிறேன். தனது ஒவ்வொரு பந்துவீச்சு சுற்றிலும் விக்கெட் ஒன்றை வீழ்த்தும் வீரர் ஒருவராக அவர் உள்ளார். சிறந்த இடங்களுக்கு அவர் பந்தை வீசினார்.

அதுவே என்னைபொறுத்தவரை நல்லதாகவும் முகம்கொடுக்க சவால் கொண்டதாகவும் இருந்தது. அவருக்கு முகம் கொடுத்த அனைவரும் பந்துவீச்சில் ஏதோசெய்யப்போகிறார் என்று உணர வைத்தார். எதிரணியைச் சேர்ந்த இந்த இருவரும்திறமையை வெளிப்படுத்தினார்கள் என்று நான் நினைக்கிறேன் என்றும் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

(ப)




# கிரிஸ்மனுக்கு 758 கோடி: வாங்கத் தயாராகும் பார்சிலோனா

உதைபந்து விளையாட்டின் தலைசிறந்த வீரராக பிரேசில் நாட்டின் நெய்மர் திகழ்ந்து வருகிறார். இவர் ஸ்பெயின் நாட்டின் முன்னணி கழகமான பார்சிலோனாவிற்காக விளையாடி வருகிறார். தற்போது அவர் பார்சிலோனா அணியை விட்டு வெளியேற விரும்புகிறார். கடந்த ஆண்டும் இது போன்று வெளியேறுவதாக கூறினார். இறுதியில் பார்சிலோனாவுடன் 2021 வரை விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

தற்போது பிரான்ஸ் நாட்டின் முன்னணி அணியான பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி (பி.எஸ்.ஜி.) நெய்மரை வாங்க விரும்புகிறது. அந்த அணியாரும் எதிர்பார்க்க முடியாத அளவிலான சம்பளத்தை நெய்மருக்கு கொடுக்க முன்வந்துள்ளது. அந்த வாய்ப்பை நெய்மர் ஏற்றுக் கொண்டார்.

ஆகவே, எப்போது வேண்டுமென்றாலும் நெய்மர் (பி.எஸ்.ஜி) செல்லலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் நெய்மர் வெளியேறினால், அவருக்குப் பதிலாக அட்லெடிகோ மாட்ரிட் அணிக்காக விளையாடி வரும் கிரிஸ்மானை வாங்க பார்சிலோனா விரும்புகிறது.

இதற்காக அட்லெடிக்கோ மாட்ரிட் அணிக்கு டிரான்ஸ்பர் பீஸாக 90 மில்லியன் பவுண்ட் (758.29 கோடி ரூபாய்) கொடுக்க முன்வந்துள்ளது. ஏற்கனவே கிரிஸ்மானை மான்செஸ்டர் யுனைடெட் அணி வாங்குவதற்கு விரும்பியது. ஆனால், கிரிஸ்மான், அட்லெடிக்கோ மாட்ரிட் அணிக்காகத் தான் தொடர்ந்தும் விளையாடுவேன்என்று தெரிவித்திருந்தார். தற்போது பார்சிலோனா அவருக்கு வலைவிரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

### ஹொங்கொங் பயணமாகும் இலங்கை வீரர்களின் இறுதி விவரம் அறிவிப்பு

# ஆசிய செவன்ஸ் சம்பியன் பட்டத்தை தக்க வைக்குமா இலங்கை ரக்பி அணி?




எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில் ஹொங்கொங் கிங்ஸ் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ள 20 வயதுக்கு உட்பட்ட ரக்பி செவன்ஸ் போட்டிகளுக்கான 12 பேர்கொண்ட ரக்பி குழாமை இலங்கை ரக்பி தெரிவுக் குழு அறிவித்துள்ளது.

எதிர்பார்த்தவாறே முன்னாள் புனித தோமியர் கல்லூரி அணித் தலைவர் நவீன் ஹேனகன்கனமகே குறித்த அணியை வழிநடத்தவுள்ள அதேநேரம், அனுபவம் வாய்ந்த (three - quarter) சுபுன் தில்ஷான் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, ரக்பி கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வீரர்களான லஹிறு ஹேரத், அதிஷ வீரதுங்க (இலங்கை கடற்படை விளையாட்டுக் கழகம்) வாஜித் பௌமி மற்றும் சந்தேஷ் ஜயவிக்ரம (பொலிஸ் விளையாட்டுக் கழகம்) போன்ற அனுபவம் மிக்க ரக்பி வீரர்கள் அணியைப் பலப்படுத்தவுள்ளனர்.

சமோத் பெர்னாண்டோ (இசிபதன கல்லூரி), அவிஷ்க லீ (வெஸ்லி கல்லூரி), தினுக் அமர்சிங்க (புனித அந்தோனியார் கல்லூரி), மற்றும் தீக்ஷண தசநாயக்க (புனித பேதுரு கல்லூரி) ஆகியோரும் அண்மையில் நிறைவுற்ற சுப்பர் செவன்ஸ் மற்றும் சிங்கர் பாடசாலைகளுக்கிடையிலான ரக்பி லீக் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தமை காரணமாக இவ்வணியில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சுரங்க பண்டார, றணிது பத்மசங்க (இசிபதன கல்லூரி), ஆகியோர் சுப்பர் செவன்ஸ் மற்றும் மெர்கன்டைல் செவன்ஸ் (Mercantile 7's) போட்டிகளில் சிறப்பித்திருந்தமை காரணமாக அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த பைவ் எய்ட் (five - eight) வீரரான சதுர செனவிரத்ன மற்றும் ஹெவலொக் விளையாட்டுக் கழக விங்கர் ரமேஷ் பெர்னாண்டோ உட்பட தனுஜ மதுரங்க ஆகியோர் உதிரி வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## அபித்தாவின் அபார ஆட்டத்தால் சம்பியனாகியது யூனியன் அணி





(கங்கா)

அபித்தாவின் நெறிப்படுத்திய தலைமைத்துவ ஆட்டம் கைகொடுக்க, மிகுந்த போராட்டத்தின் மத்தியில் வின்ஸ்ரார் அணியை வீழ்த்தி சம்பியனாகியது தெல்லிப்பழை யூனியன் அணி.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நடத்தப்பட்டது. இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 8 அணிகள் பங்குபற்றின.

முதற்சுற்று ஆட்டங்களிலிருந்து வின்ஸ்ரார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யூனியன் மற்றும் பமிலியன் ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

அரையிறுதியில் வின்ஸ்ரார் அணி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியையும், யூனியன் அணி பமிலியன் அணியையும் வென்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன.

இறுதிப்போட்டி நேற்று வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை வலைப்பந்தாட்ட திடலில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் மோதிய இரண்டு அணிகளும், மிகவும் பலம் பொருந்திய அணிகளாகக் காணப்பட்டன.

மிகுந்த போராட்டத்தின் மத்தியில் முதற்சுற்றை யூனியன் அணி 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. அந்த உற்சாகத்துடன் இரண்டாவது சுற்றை ஆடிய யூனியன் அணி அந்தச் சுற்றை 9:5 என இலகுவாக கைப்பற்றியது.

எனினும், தமக்கான வாய்ப்பை விட்டுக்கொடுக்காது ஆடிய வின்ஸ்ரார் அணி, 3 ஆவது சுற்றில் கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தியது. எனினும் அந்தச் சுற்றையும் யூனியன் அணி 9:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

மூன்றாவது சுற்றில் வின்ஸ்ரார் அணி எழுச்சியடைந்தமையால் நான்காவது சுற்று பெரும் எதிர்பார்ப்பு மிகுந்ததாக மாறியது. நான்காவது சுற்றில் வின்ஸ்ரார் அணி சிறப்பாக விளையாடியது. இருந்தும், புள்ளிகள் வித்தியாசத்தில் அதிக இடைவெளி வரவிடாமல் யூனியன் அணியும் பார்த்துக்கொண்டது. 4ஆவது சுற்றை வின்ஸ்ரார் அணி 10:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

முடிவில் யூனியன் அணி 34:29 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்துக்கான போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, 32:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் பமிலியன் அணியை வென்றது.

இந்த வருடத்துக்கான சிறந்த வலைப்பந்தாட்ட அரசியாக யூனியன் அணியின் ரி.அபித்தா தெரிவு செய்யப்பட்டார். மேலும், சிறந்த மத்திய கோட்டு வீராங்கனையாக யூனியன் அணியின் கே.சுபரிசனுஜா, சிறந்த காப்பாளராக வின்ஸ்ரார் அணியின் எஸ்.சிறிசக்தி, சிறந்த பேற்றுக்கெய் பவராக யூனியன் அணியின் ரி.பகீர்தா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

முதன்மை அதிதிகளாக கலந்து கொண்ட வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன், சிவன் அறக்கட்டளை நிறுவுனர் கணேஸ்வரன் வேலாயுதம் ஆகியோர் சிறந்த வீராங்கனைகள் மற்றும் வெற்றிபெற்ற அணிகளுக்கான கேடயங்களையும் பரிசில்களையும் வழங்கினர்.

## பட்மிண்டன் தரவரிசைப் பட்டியல்: 5 ஆவது இடத்தில் பி.வி.சிந்து



சர்வதேச பட்மிண்டன் தரவரிசைப் பட்டியலில் இந்திய வீராங்கனையான பி.வி.சிந்து 5 5 ஆவது இடத்தில் காணப்படுகின்றார்.

உலகின் சிறந்த வீரர்களுக்கான பட்மிண்டன் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் பெண்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்திய வீராங்கனையான பி.வி. சிந்து தொடர்ந்து 5ஆவது இடத்தில் நீடிக்கிறார்.

அதே நேரத்தில் மற்றொரு இந்திய வீராங்கனையான சாய்னா நெவால், 16 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

பெண்களுக்கான பிரிவில் முதல் 25 இடங்களில் இவர்கள் இருவர் மட்டுமே இடம்பெற்றுள்ளனர்.

ஆண்களுக்கான தரவரிசைப் பட்டியலில் கிடாம்பி ஸ்ரீகாந்த் 8ஆவது இடத்தில் உள்ளார். ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேஷியாவில் நடந்த பட்மிண்டன் தொடர்களில் சம்பியன் பட்டம் வென்றமையால் அவர் இந்த அளவுக்கு முன்னேறியுள்ளார். மற்றொரு இந்திய வீரரான பிரணாய் 6 இடங்கள் முன்னேறி 17 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த யு.எஸ் ஓபன் பட்மிண்டன் போட்டியில் பட்டம் வென்றமையால் அவர் இந்த அளவுக்கு முன்னேறியுள்ளார்.

இதே பட்மிண்டன் தொடரில் இறுதிப் போட்டி வரை முன்னேறிய இந்தியாவின் காஷ்யப் 12 இடங்கள் முன்னேறி 47ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் சமீர் வர்மா 28 ஆவது இடத்திலும், அஜய் ஜெயராம் 16ஆவது இடத்திலும், சாய் பிரணீத் 19ஆவது இடத்திலும் உள்ளனர். கலப்பு இரட்டையர் பிரிவில் பிரணவ் ஜெர்ரி சோப்ரா - சிகி ரெட்டி இணை 20ஆவது இடத்திலும் உள்ளனர்.

(ப)

## வீட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரத்தி வெட்டியுள்ளது.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுக் கழகத்திற்கு சமீபமாக உள்ள வீடொன்றில் நேற்று மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த விஜயன் விஜயராஜ் (வயது–22) என்பவரே படுகாயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவர் தனியார் துறையொன்றில் கல்வி கற்கும் மாணவர் எனக் கூறப்படுகின்றது.

ஆறு பல்சர் ரக மோட்டார் சைக்கிள்களில் சென்ற 12 பேர் கொண்ட ரவுடிகளே இந்த இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தமது முகங்களையும் மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகளையும் கறுப்புத் துணிகளால்கட்டிமறைத்தவாறுசென்ற மேற்படி ரவுடிக் கும்பல் கைகளில் பாரிய வாள்களைத் தாங்கியிருந்தது.

அந்த இளைஞனின் வீட்டுக்குள் புகுந்த அந்தக் குழுவினர் அங்கு இருந்து தாய், தந்தை உறவினர்களைப் பொருட்படுத்தாமல் இளைஞன் மீது வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டனர். அதன்போது அவர் தப்பியோடிய நிலையில் துரத்தித்துரத்தி வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது.

இளைஞனும் பெற்றோரும் அலறிய சத்தம் கேட்டு அங்கு உறவினர்களும் அயலவர்களும் குழுமத் தொடங்கியதால் அந்த வாள்வெட்டுக் கும்பல் தப்பி சென்றது எனக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி வாள்வெட்டுக் குழுவினர் கொண்டுசென்ற வாள்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை எனவும் முன்னைய காலத்தில் அரசர்கள் பயன்படுத்திய வாள்களைப் போன்று அவை தோற்றமளித்தன எனவும் வாள்களைப் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான வாள்களுடன் ரவுடிக் கூட்டம் ஒன்று மிகவும் சுதந்திரமாக வலம் வரக்கூடிய நிலை யாழ்ப்பாணத்தில் இருக்கின்றது என்பதை நினைக்க தங்களுக்குப் பயமாக இருக்கின்றது எனவும் அவர்கள் கூறினர்.

### நவக்கிரியிலும் வாள்வெட்டு

இதேவேளை, புத்தூர் – நவக்கிரிப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட கோஷ்டி மோதலின்போது இடம்பெற்ற வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று முன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ஞானேஸ்வரன் நிரோஜன் (வயது – 22) என்பவரே படுகாயமடைந்தார். அவர் சிகிவிவிசைக்காக அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் நேற்றுக் காலை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடுபதிவுசெய்யச்சென்ற போது அவர்கள் முறைப்பாட்டைப் பதிவு செய்யவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர். (ம)

## ஊடகவியலாளரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான காணொலி ஒன்றும்தற்போது பரவிவருகிறது.

யாழ்ப்பாணத்தில் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் புதிய இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்கவுக்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

முதலமைச்சர் இல்லத்தில் நடந்த இந்தச் சந்திப்பிற்காக இராணுவத்தளபதி வந்து இறங்கியபோது, படம் பிடிப்பதற்காக ஊடகவியலாளர்கள் உள்ளே செல்ல முயன்றுள்ளனர். இந்த நிலையில் ஊடகவியலாளர்களை முதலமைச்சர் இல்லத்தின் உள்ளே செல்ல அனுமதிக்காத இராணுவத்தினர் வாயிலில் வைத்துத் தடுத்துள்ளனர்.

பின்னர் ஊடகவியலாளர் ஒருவர், படம் பிடிப்பதற்காக ஒளிப்படக் கருவியை நீட்டிய போது அங்கிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் அந்த ஒளிப்படக்கருவியைத் தட்டி வீழ்த்தியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான காணொலி தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

## 5 நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும்.

மாணவர்கள் மீது அரசு ஒடுக்கு முறைகளைப் பிரயோகித்தால் எதிர்காலத்தில் மோசமான தீர்வுகளை மாணவர்கள் எடுக்க நேரிடும் என இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மருத்துவ பீட மாணவ செயற்பாட்டாளர்கள் குழுவின் இணைப்பாளர் ரயன் ஜயலத் தெரிவித்தார்.

இதேவேளை, மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றும் பலபிரதேசங்களில்ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் இடம்பெற்றன.

நுவரெலியா, ராகமை, மினுவன்கொடை மற்றும் களனி ஆகிய பகுதிகளிலும் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன எனக் கூறப்படுகின்றது.

## காணாமல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

காணாமற் போனோர் அலுவலகத்தால்வழக்குத்தாக்கல்செய்ய முடியாது. ஆனால், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக்கும் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால் அதன் பின்பு காணாமல் ஆக்கப்படுதல் இலங்கையில் குற்றமாகும்.

காணாமற் போனோர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும்விசாரணைகளில்கடத்தியவர் யார் என்பது கண்டறியப்பட்டால், அரசாங்கம் சட்டமா அதிபர் அவர்களுக்கு எதிராக பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் குற்றமாகும் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்லாம். இதேவேளை, ஏனைய பல நாடுகளில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்துக்கு என்ன நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது என்பதை அடிப்படையாக வைத்தே எமது நாட்டில் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. ஆணைக் குழுக்கள் போன்றது அல்ல இந்த அலுவலகம் – என்றார் சுமந்திரன்.

காணாமற்போனோர் அலுவலகத்தால் முற்றுமுழு தான தீர்வைப் பெற்று கொடுக்க முடியும் என்று சொல்ல முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நிழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளத்தக்கதாக பொது இடம் ஒன்றில்விரிவானஅலுவலகத்தை அமைத்துச் செயற்படவும் –

அந்த அலுவலகத்தில் மாகாண சபையில் இருப்பது போன்று தனித் தனிப் பிரிவுகளை உருவாக்கி மக்களின் முறைப்பாடுகள், கோரிக்கைகள், ஆலோசனைகளை ஒன்று திரட்டவும் –

திரட்டப்பட்ட அந்த விடயங்கள் தொடர்பில் மாகாண சபையின் உரியமட்டத்தோடுஊடாட்டங்களை நடத்தி, விட யங்களைக் கையாளவும் –

அது குறித்து அவ்வப்போது ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குத் தெரியப்படுத்தவும் –

ஒழுங்குமுறை முன்னெடுக்கப்படுவதாகத் தெரிய வருகின்றது.

சமூகத்தில் புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், ஈடுபாடுள்ள தரப்பினர் ஆகியோரை ஒன்றிணைத்து இது குறித்து இரண்டு தடவைகள் யாழ் நகரில் கூடி ஆராயப்பட்டுள்ளது.

தற்போதைய வடக்கு மாகாண சபையின் எஞ்சிய பதவிக் காலத்தை மாகாணசபையினைத் திறன் உள்ள முறையில் முன்னெடுப்பதற்கு, அரசியல் கட்சி சாராமல், ஊக்குவித்து ஒத்துழைப்பதை இலக்காகக் கொண்டு இந்த நிழல் மாகாணசபை இயங்கும்.

ஒவ்வொரு அமைப்பையும் கையாள்வதற்கு அந்த நிழல் சபையின் அலுவலகத்தில் தனித்தனிப் பிரிவுகள் இயங்கும் என்றும் தெரிகின்றது.

இதில் இயங்குவோர் கட்சி சார்பற்றவர்களாக – அணி சேராதவர்களாக– செயற்படுவர் என்றும் –

எனினும் அந்த அமைப்பின் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்காக வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவரான சி.தவராசாவை மட்டும் அதன் நடவடிக்கைகளுக்குள் உள்வாங்கிக் கொள்வதென முடிவு செய்யப்பட்டிருக்கின்றது என்றும் அறிய வந்தது. (உ)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“இடைக்கால அறிக்கை ஆவணி மாத்ததில் அரசமைப்பு சபையான நாடாளுமன்றுக்கு வரும். அங்கு புதிய அரசமைப்பு இறுதிசெய்யப்படும். அந்த இறுதி வடிவம் தயாரானதும் நாம் மக்களிடம் அதனை எடுத்து வருவோம்.

மக்களின் கருத்தையும் கேட்போம். அவர்களின் இணக்கப்பாட்டுடன்தான் அந்தத் தீர்வை முன்னெடுப்போம்” – என்றார் சம்பந்தன். (உ)

## கோப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரு பொலிஸாரில் ஒரு வருக்கு கை, கால், தொடைப் பகுதியில் பலமான காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் சுரேன் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ரட்ணாயக்க தம்பிக்க ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் கூறப்படுபவை வருமாறு:–

தமக்குக் கிடைத்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்வதற்காக கொக்குவில் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் இந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் சென்றிருந்தார்கள். அப்போது கொக்குவில் நந்தாவில் பகுதியில் சிலர் மது அருந்திவிட்டுக் குழப்பத்தில் ஈடுபடுகின்றார்கள் என அவர்களிடம் அப்பகுதியை சேர்ந்தவர்கள் சிலர் கூறியுள்ளார்கள்.

இதனையடுத்து அப் பகுதிக்கு அவர்கள் இருவரும் சென்று பார்த்த போது அங்கு சில இளைஞர்கள் மது அருந்திகொண்டிருக்கின்றமைமையும் அவர்களிடம் வாள் போன்ற ஆயுதங்கள் காணப்பட்டமையையும் கண்டனர். அதனையடுத்து பொலிஸார் இருவரும் அங்கிருந்து திரும்பி பொலிஸ் நிலையம் நோக்கி சென்றுள்ளார்கள்.

இச் சமயத்திலேயே அவர்களை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த கும்பலொன்று அவர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது. (உ)

## காஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் லாவ்ஸ் நிறுவனங்கள் வாழ்க்கைச் செலவு சம்பந்தமான குழுவிடம் விடுத்துள்ள வேண்டுகோள் தற்போது பரிசீலனையில் இருப்பதாகவும், அநேகமாக இன்னும் ஓரிரு தினங்களில் அதுபற்றிய முடிவு எடுக்கப்படலாம் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை உயர்ந்திருப்பதாலும் டொலரின் மதிப்பு அதிகரித்திருப்பதாலும் இந்த விலையுயர்வைத் தவிர்க்கமுடியாதென இவ்விரு நிறுவனங்களும் சுட்டிக்காட்டியிருக்கின்றன எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## புதனன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைட்டம் தனி யார் மருத்துவ கல்வி நிறுவன அனுமதி, எட்கா உடன்படிக்கை, காணாமற்போனோர் தொடர் பான சட்டம், தேர்தல் ஒத்திவைப்பு போன்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த எதிர்ப்பு நடவடிக்கை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் ரணிலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகள், மக்கள் விடுதலை முன்னணி, தொழிற்சங்கங்கள், பெரும்பான்மை சமூக அமைப்புக்கள், மாணவர் ஒன்றியங்கள் என்பன ஒன்றிணையவுள்ளன எனத் தொழிற்சங்கங்களின் ஏற்பாட்டாளர் உபாலி ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தல், அந்த நிறுவனங்களின் முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துதல், மாவட்ட ரீதியில் பிரதான நகர்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தல், ஊர்வலங்களை நடத்துதல், பொதுக் கூட்டங்களைநடத்தல் நிறுவனங் களில் கறுப்புப் பட்டி அணிந்து பணியாற்றல்போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்து கொள்ளுமாறு கோரி, அரச மற்றும்தனியார் அமைப்புக்களுடன் பேச்சுக்களில் தாங்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள் திருகோணமலையில் மூன்று மாதங்களுக்கு முன் சந்தித்த பின்னர் இன்றுதான் கூடியுள்ளோம் என்று நம்புகின்றேன். எமது நோக்குகளும் நடவடிக்கைகளும் எம் மக்கள் சார்பாக மாண்புடன் பயணிக்க வேண்டும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடமிருக்க முடியாது. முக்கியமான சில கேள்விகள் இப்போது எழுகின்றன.

1. நாங்கள் மக்கள் இயக்கமாக பரிணாமம் பெற்றபின் மக்களை அரசியல்ரீதியாகஆற்றுப்படுத்த இதுவரை எடுத்த நடவடிக்கைகள் போதுமானவையா?

2. அரசியல் கருத்துக்கள், அரசியல் எதிர்பார்ப்புக்கள் ஆகியன எம் மக்களிடையே படிகப்பட்டு விட்டனவா?

3. எம்முள் இருக்கும் பல்வித மான கட்சி, மதம், தொழில் சார்ந்த நடைமுறை வேற்றுமைகள் எம் மக்களின் ஒருமித்த அரசியல் பயணம் என்ற ஒரு பொதுநிகழ்வின் அடிப்படையில் தேவையான அளவுக்குத் தணிய விடப்பட்டுளனவா?

– இவ்வாறான பல கேள்விகள் எம்மிடையே எழுவது இயல்பே.

கட்சி ரீதியாக நாம் செல்லக் கூடிய பயணம் வேறு, இயக்கமாக இயங்கிச் செல்வதுவேறு

பக்கம் 03 ›››

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை யாழ். ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள நாக விகாரைக்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

தொடர்ந்து யாழ்.நகரில் அமைந்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர்சி.வீ.விக்னேஸ்வரனின் இல்லத்துக்கு மதியம் 12.30 மணியளவில் சென்று 1 மணிவரை சுமார் அரை மணித்தியாலம் முதல்வரைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும்அவர்கலந்துரையாடினார்.

இச் சந்திப்புத் தொடர்பாக முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் –

இது இராணுவத் தளபதியின் உத்தியோகபூர்வ விஜயம் அல்ல. யாழ்.வந்ததால் அவர் என்னைச் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றார். பலவிடயங்கள்குறித்தும் பேசினோம்.

யாழ் இராணுவத் தளபதியாக இருந்து கொழும்பிற்கு மாற்றலாகிச் செல்கின்ற போது என்னைச் சந்தித்திருந்த அவரிடம் மயிலிட்டியை விடுவிப்பது குறித்து பேசியிருந்தேன். வெகு விரைவில் மயிலிட்டியை விடுவித்துத் தருவார் என என்னிடம் அவர் கூறியிருந்தார்.

அதற்கமைய தற்போது மயிலிட்டி விடுவிக்கப்பட்டிருக்கின்றமையையும் இப்போது அவர் எடுத்துக் கூறியிருந்தார்.

மயிலிட்டி விடுவிக்கப்பட்டாலும் அந்த மக்களின் பிரதான பாதை இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்பதையும் அதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதையும் இராணுவத் தளபதியிடம் நான் சுட்டிக்காட்டினேன்.

பக்கம் 03 ›››

# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் மிகப்பெரும் பொறுப்பு இந்தியாவிடமே!

## இந்திய ஊடகத்துக்கு அளித்த செவ்வியில் சம்பந்தன் கருத்து



ஒரு காத்திரமான, கணிசமான அதிகாரப் பகிர்வானது, மக்களுக்கு சுயாட்சி உணர்வையும், நாட்டுடன்இணைந்திருக்கும் உணர்வையும், நாடு தம்முடன் இணைந்திருக்கிறதுஎன்றஉணர்வையும் கொடுக்கும்என்றுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டிருக்காவிடின், இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணப்பட்டிருக்கும்.

புதிய அரசமைப்பை வரையும் அரசின் முயற்சியின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண முடியும் என்றநம்பிக்கை உள்ளது.

ஒரு காத்திரமான, கணிசமான அதிகாரப் பகிர்வானது, மக்களுக்கு சுயாட்சி உணர்வையும், நாட்டுடன்இணைந்திருக்கும் உணர்வையும், நாடு தம்முடன் இணைந்திருக்கிறதுஎன்றஉணர்வையும் கொடுக்கும் இலங்கை மீதான இந்தியாவின் அக்கறைதனியேபொருளாதார மற்றும் மூலோபாய நலன்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

தனது அண்டை நாட்டில் இன்னமும் நீடிக்கும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத்தீர்வு காண்பதற்கான பொறுப்பும் தமக்கு உள்ளது என்ற பலமான உணர்வும் அதற்குஉள்ளது.-என்றார்.

## சந்நிதி மகோற்சவ கலந்துரையாடல்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இம் மகோற்சவத்திற்கான முதலாம் கட்ட ஏற்பாட்டுக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டம் தொடர்பான அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றவர்கள் சமுகமளித்து மகோற்சவம் சிறப்புற நடைபெற தங்கள் ஆலோசனைகளை வழங்குமாறு பிரதேசசெயலாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (ப)

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது

### மறுக்கிறார் அமைச்சர் ராஜித



கொழும்பு, ஜூலை 31

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையின் நிர்வாக சபைக்கு புகையிலை உற்பத்தி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும், அந்த நபர் கணக்காய்வாளராகவும், பிரதமரின் ஆலோசகராகவும் கடமையாற்றி வருகின்றார் என்று சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சங்கத்தினர் பிரதமருடன் சந்திப்பு நடத்திய போதும் அதன் இணைப்புப் பணிகளை அந்த நபரே மேற்கொண்டிருந்தார். தமக்கு உதவிய நபர் ஒருவரை இவ்வாறு விமர்சனம் செய்வது பொருத்த மற்றது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வடமராட்சி, ஜூலை 31

வடமராட்சிகிழக்கு மருதங்கேணிபிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு மருதங்கேணிபிரதேச செயலகமண்டபத்தில் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன், அங்கஜன்இராமநாதன் ஆகியோரின்இணைத் தலைமையில் இடம் பெறவுள்ளது. (ப)

## தேசிய பொருளாதார பேரவையை நிறுவுவதற்கு ஜனாதிபதி திட்டம்

கொழும்பு, ஜூலை 31

தேசிய பொருளாதாரப் பேரவை ஒன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதிட்டமிட்டுள்ளார். நாட்டின் பொருளாதார கொள்கைகளை சிறந்த முறையில் முன்னெடுக்கும் நோக்கில் இவ்வாறு தேசியப் பொருளாதாரப் பேரவை உருவாக்கப்பட உள்ளது.

ஜனாதிபதிக்கு நேரடியாக பதில் சொல்லக் கூடிய வகையில் உருவாக்கப்பட உள்ள இந்தப் பேரவை தொடர்பிலான உத்தேசத் திட்டம் ஜனாதிபதியால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

நாட்டின்பொருளாதாரத்தை மேம்படுத்தும் அனைத்துத் திட்டங்களும் இந்தப் பேரவையின்ஊடாகமுன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் காலங்களில்இந்தப்பேரவையை மீறிவேறுநிறுவனங்கள் பொருளாதாரக்கொள்கை வகுப்புச்செயன்முறையில் ஈடுபட முடியாது என்றும்தெரிவிக்கப்படுகிறது. (எ)

## சீனக் கடற்படை செயற்பாடுகளுக்கு தடை விதித்ததே இந்திய, அமெ. அழுத்தங்கள் குறையக் காரணம்

### அம்பாந்தோட்டை துறைமுக விவகாரத்தில் என்கிறார் அமைச்சர் நவீன் திஸாநாயக்க

கொழும்பு, ஜூலை 31

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடற்படை சார்ந்த செயற்பாடுகள்எவற்றையும்முன்னெடுக்கக்கூடாதென அரசு சீனாவுக்கு அழுத்தமாக தெரிவித்துள்ளது என்று அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இதன்காரணமாகவே அம்பாந்தோட்டைதுறைமுக விவகாரத்தில் இந்தியா மற்றும் அமெரிக்காவின் கடுமையான எதிர்ப்பு குறைந்துள்ளது என அவர் மேலும் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டை துறைமுகநிர்மாணப்பணிகளுக்கு சீனாவிடத்தில் இந்து பெறப்பட்ட பணத்தை மீளச் செலுத்தாதிருக்கவே அந்தத் துறை முகத்தை 99 வருடங்கள் குத்தகைக்கு வழங்க அரசு தீர்மானித்தது. இதனால், எமது நாட்டுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படா. எமக்கு அவசியமான போது பணத்தைசெலுத்திவிட்டு துறைமுகத்தை மீளப் பெறமுடியும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஸ்ரீலங்கா எயார் லயன்ஸ் நிறுவனத்தை இவ்வாறு குத்தகைக்கு வழங்கியிருந்த போது அதனைமுன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரின் ஆட்சிக் காலத்தில் பணத்தை செலுத்தி மீளப் பெற்றார். அதற்குநிகரானமுறையே அம்பாந்தோட்டைதுறைமுக விவகாரத்திலும் கையாளப்படுகின்றது.

எவ்வாறாயினும் அம்பாந்தோட்டைதுறைமுகம் ஆரம்பிக்கப்பட்ட போது அது தொடர்பிலான சரியான திட்டமிடல்கள் இருக்கவில்லைஎன்பதையும் அதனால் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தும் வழி முறையும் செய்திருக்கப்படவில்லை என்பதையும் நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். இன்று அதனை பயனுள்ளதாக மாற்ற நினைக்கின்ற போது கூட்டு எதிரணி அதனைத் தடுக்க முயற்சித்தாலும் அவர்களின் முயற்சி சாத்தியப்படாது.

இதற்குக் காரணம் தற்போதைய அரசு அம்பாந்தோட்டைத் துறைமுக விவகாரம் தொடர்பில் சரியான நேரத்தில் சரியான உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டுள்ளது.




எவ்வாறாயினும் இந்த ஒப்பந்தத்தில் மேற்படி துறைமுகத்தில் துரித அபிவிருத்திச் செயற்பாடுகளை ஏற்படுத்திக் காட்டும் வழிமுறை பற்றி சீன நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது. அதனாலேயே ஒப்பந்தத்துக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை அரசின் சார்பில் சீனாவின் கடற்படைசெயற்பாடுகள் எவற்றையும் அம்பாந்தோட்டைதுறைமுகத்தில் முன்னெடுக்க முடியாது என்ற விடயம் அழுத்தமாகவே வலியுறுத்தப்பட்டுள்ளது. அதனாலேயே இந்த விவகாரத்தில் அமெரிக்கா, இந்தியாஉள்ளிட்ட நாடுகளின் அழுத்தமும் குறைந்துள்ளது.- என்றார். (எ)

## மனிதவள முகாமைத்துவம் கற்கைக்கு விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலை யத்தால் மனிதவள முகா மைத்துவம் (Human Rasourse Management) குறுகிய காலக்கற்கை நெறிக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. 18வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கற்கை நெறி 3 மாதங்களைக் கொண்டுள்ள நிலையில் இந் நெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலையை உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)




## உ.த. வகுப்புகளுக்கு புதனுடன் தடை

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவருக்கான மேலதிக வகுப்புக்கள் மற்றும் கருத்தரங்குகள் என்பன நாளை மறுதினம் புதன்கிழமை நள்ளிரவு முதல் தடைசெய்யப் படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. தடையை மீறி வகுப்புக்கள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவோர் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனஅறிவிக்கப்பட்டது. (ம)

## யாழில் கறுப்பு ஜூலை நினைவேந்தல்







கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபி முன்றிலில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் இளையோர் இயக்கத்தினால் அழைப்பு விடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர், பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தோர் என பல தரப்பினருமாக நூற்றுக்கு மேற்பட்டோர் பங்கு பற்றினர்.

முல்லை. நிலஆக்கிரமிப்பு, முதலமைச்சருக்கு எதிரான அரசியல் சூழ்ச்சி ஆகியவற்றை எதிர்த்து இந்த இளையோர் அமைப்பு போராட்டங்களை முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## தமிழ் மக்கள் பேரவைக் கூட்டம்





தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டம் நேற்று யாழ். நூலகக் கேட்போர் கூடத்தில் காலை 10 மணியளவில் இணைத்தலைவர்களான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், வைத்தியர் பி.லக்ஷ்மன் மற்றும் ரி.வசந்தராசா ஆகியோர் தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# வாக்கு தவறிவிட்டார் ஜனாதிபதி மைத்திரி

### பெற்றோலிய தொழிற்சங்கங்கள் விசனம்

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் நாளை ஓகஸ்ட் முதல் திகதி வரை கைச்சாத்திடப்படமாட்டாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தங்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறியுள்ளார் என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க சம்மேளனம் குற்றஞ் சுமத்தியிருக்கின்றது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன் தங்களது சம்மேளனத்துடன் நாளைய தினத்துக்கு முன் கலந்துரையாடப்போகிறார் என வாக்குறுதி வழங்கிய ஜனாதிபதி, அவசர அவசரமாக இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருக்கின்றமை பெரும் நம்பிக்கைத்துரோகம் எனவும், நாட்டின் தலைவரொருவர் ஒரே வாரத்தில், தான் கொடுத்த வாக்குறுதியை இவ்வாறு மீறியிருக்கின்றமை ஜீரணிக்கவே முடியாத விடயம் எனவும் அதனை ஜனாதிபதிக்கு தாங்கள் கடிதமூலம் அறிவித்திருக்கின்றனர் எனவும் அச்சம்மேளனத்தின் அமைப்பாளர் டீ.ஜே.ராஜ கருண தெரிவித்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி தாங்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டத்தின்போது ஜனாதிபதி மூன்று முக்கிய அமைச்சர்களுடன் தங்களைச் சந்தித்தபோது அளித்த இந்த வாக்குறுதியை நம்பியே தாங்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டார்கள் எனவும், எனினும், அவர் தங்களை நன்றாக ஏமாற்றிவிட்டார் எனவும் ராஜ கருண விசனம் தெரிவித்துள்ளார். (உ)

## அரசுக்கு அச்சுறுத்தல் விடுத்து சைட்டத்தை மூடிவிட முடியாது

### அடிபணியோம் என்கிறார் அமைச்சர் கிரியெல்ல

அரசாங்கத்திற்கு பயம் காட்டுவதன் மூலம் "சைட்டத்தை" மூடிவிட முடியும் எனச்சிலர் கனவு காண்கின்றனர் எனத் தெரிவித்துள்ள பெருந்தெருக்கள் அமைச்சரும் சபைத்தலைவருமான லக்ஷ்மன் கிரியெல்ல, அரசாங்கம் ஒரு போதும் சைட்டத்தை மூடி விடாது எனவும் உறுதிபடக் கூறினார்.

அரசாங்க எதிர்ப்பாளர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் 02 ஆம் திகதி ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளமைக்கான காரணம் அன்றையதினம் சைட்டம் தொடர்பான வழக்கு விசாரணை நடைபெறுவதனாலாகும்.

வழக்கு நடைபெறும் தினத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தி நீதிமன்றத்துக்கு அச்சுறுத்தல் விடுக்க சைட்டம் எதிர்ப்பாளர்கள் முயற்சிக்கின்றனர் என அமைச்சர் மேலும் கூறினார். (ம)

## டெங்கு ஒழிப்பு







டெங்கு ஒழிப்பு சிரமதான நடவடிக்கை நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டபோது.

## மேசன் வேலை செய்த இளைஞர் மயங்கி வீழ்ந்த பின் உயிரிழந்தார்

மேசன் வேலை செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவன் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் எனக் கூறப்படுகின்றது. நேற்றுக் காலை 10 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தெல்லிப்பழைப் பிரதேசத்தில் வேலை செய்து கொண்டிருந்த தென்மராட்சி சரசாலையைச் சேர்ந்த தேவராசா நந்தகுமார் (வயது -25) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மேற்படி இளைஞர் கடந்த சில தினங்களாக தெல்லிப்பழைப் பிரதேசத்தில் மேசன் வேலையில் ஈடுபட்டு வந்தார் எனவும் நேற்றும் வழமை போன்று வேலையில் ஈடுபட்டிருந்த போது அவர் திடீரென மயங்கி நிலத்தில் வீழ்ந்தார் எனவும் அவரது சக பணியாளர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்துத் தாங்கள் அவரை உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்த்தனர் எனவும் பின்னர் அங்கிருந்து அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டார் எனவும் அவர்கள் கூறினர். எனினும் அங்கு சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழைப்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)





நகரமயமாக்கல் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் 13 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் யாழ்.மாநகர சபையினால் அமைக்கப்பட்ட 76 கடைகளை உள்ளடக்கிய சிறிய சந்தை தொகுதி நேற்று வடக்கு முதலமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் யாழ்.மாநகர சபை ஆணையாளர், யாழ்.வணிகர் சங்கத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வெடி பொருள்கள் மீட்பு...



காரைநகர் – ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு அருகிலிருந்த பாழடைந்த கிணற்றில் இருந்து வெடி பொருள்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள் நேற்று முன்தினம் கண்டு பிடிக்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர். கிணற்றை சுத்தப்படுத்தி கொண்டிருந்த பிரதேச மக்கள் முதலில் இராணுவ உபகரணங்களை அவதானித்தவுடன் கடற்படையினரிடம் தகவல் வழங்கியுள்ளனர். பின்னர் கடற்படையினர் மற்றும் பொலிஸார் அங்கிருந்து 14 கிளைமோர் குண்டுகள், 02 வெடி குண்டுகள் மற்றும் ஓர் அமுத்தக் குண்டு ஆகியவற்றை மீட்டனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.